3.3.66

# ஸ்ரீ- அங்காள பரமேஸ்வரியின், வரலாறு

முன் காலத்தில் தெய்வலோகத்தில் ஈஸ்வரனும், ஈஸ்வரியும் கொலு வீற்றிருந்தார்கள். அக்காலத்தில் ஈஸ்வரனுக்கும் ஐந்து முகம் பிர்மா (பிரமா) வுக்கும் ஐந்து முகம் இருந்தது. இவர்கள் இருவரையும் நேரில் பார்த்தால், யார்? ஈஸ்வரன் என்று, ஈஸ்வரிக்கு தெரிவதில்லை.

இப்படியிருக்கும் போது, ஈஸ்வரன் தினமும் அதிகாலையில் எழுந்து உலகத்துக்கு படியளக்-கப்போவது வழக்கம். இப்படியே ஈஸ்வரன் தினமும் படியளந்து விட்டு, வீட்டுக்கு வரும் போது சும்மா வருவதை ஈஸ்வரி பார்த்து ஒருநாள் சிவபெருமானை நோக்கி "ஏன், சுவாமி! தாங்கள் தினசரி எங்கோ போய் உலக சஞ்சாரம் செய்துவிட்டு வீட்டுக்கு வரும்போது சும்மா வருகிறீர்களே? ஏன் சுவாமி, ஒன்றும் கொண்டு வருவதில்லை?" என்றாள். அதற்கு, சிவபெருமான் பார்வதி (ஈஸ்வரி) யை நோக்கி "பெண்ணே! நான் தினசரி சென்று, உலகத்தில் உள்ள
3 மானிடம், மிருகம், பறவை, இப்படியுள்ள எல்லாவித ஜீவன்களுக்கும் படியளந்து வருகிறேன். அப்படியிருக்கும் போது, நான் என்ன கொண்டுவர முடியும்; நமக்கு, யார்?

படியளப்பார்கள்?" என்றார்.

இதைக்கேட்ட ஈஸ்வரியாகப்பட்டவள் நம்நாதன் உலகத்தில் எல்லோருக்கும் அன்றாட படியளப்பதாக சொல்கிறாரே; நாம் சில எறும்புகளைபிடித்து அடைத்து வைத்துக் கொள்ளலாம், அவைகளுக்கு எப்படி படியளப்பாரோ? பார்க்கலாமென்று நினைத்து, சில எறும்புகளை பிடித்து சிமிலில் போட்டு அடைத்து மடியில் வைத்துக் கொண்டாள்.

அன்று சிவபெருமான் உலகத்துக்கு படியளந்து விட்டு திரும்பி வீடு வந்ததும். ஈஸ்வரி எறும்புக்கு படியளந்திருக்கிறாரா பார்க்கலாமென்று, மடியில் இருந்த சிமிலை எடுத்து திறந்து பார்க்கும் போது, ஒவ்வொரு எறும்புகளும் ஒவ்வொரு அரிசியை வாயில் கவ்விக் கொண்டிருந்தது. அதைக்கண்ட ஈஸ்வரி "அடடா! இப்பேர்ப்பட்ட கடவுளாகிய நம் நாதனை சோதித்துப்பார்த்து விட்டோமே; இந்த எறும்புகளை பிடித்து நாம் அடைத்து வைத்த பாவத்தை எப்படி நிவர்த்தி செய்வ"தென்று, அன்று முதல் தினசரி காலையில் ஈஸ்வரன் உலகத்துக்கு படியளக்கப் போகும் போது, அவருக்கு பாத பூஜை செய்து, பணிவிடைகள் செய்து, அனுப்பி வந்தனள்.

இப்படி நடந்து வரும்போது ஒருநாள் ஈஸ்வரன் படியளக்கப் புறப்பட்டு போனதும், பிர்மாவானவர்

ஈஸ்வரனை பார்த்து வரலாமென்று ஈஸ்வரனுடைய வீட்டுக்கு வந்தார். பிரம்மாவைக் கண்ட ஈஸ்வரி ஈஸ்வரன் தான் திரும்பி வந்து விட்டார் என்று நினைத்து, பிரம்மாவை நமஸ்காரம் செய்து, பணிவிடைகள் செய்தாள்.

அப்போது பிரம்மா ஈஸ்வரியை நோக்கி "அம்மா, பார்வதி! உன் நாதன் எங்கே?" என்று கேட்டார். இதைக்கேட்ட ஈஸ்வரி திடுக்கிட்டு "தாங்கள், யார்?" என்று கேட்டு பிரம்மா என்று தெரிந்ததும் "ஆகா! நம் நாதன் என்று, பிரம்மாவுக்கு பணிவிடைகள் செய்தோமே" என்று ஈஸ்வரிக்கு பிரமை ஏற்பட்டு ஊஞ்சலில் போய் ஒன்றும் பேசாமல் உட்கார்ந்து கொண்டாள்.

ஈஸ்வரி இப்படிப் போய் உட்கார்ந்து கொண்டதும் பிரம்மா எழுந்து அவர் இருப்பிடம் சென்று விட்டார். ஈஸ்வரன் உலகத்துக்கு படியளந்து விட்டு திரும்பி வீட்டுக்கு வந்தார். வரும்போது வீட்டில் எந்த விதமான உபசரணையுமில்லை. ஈஸ்வரி ஊஞ்சலில் பிரமை போல் உட்கார்ந்திருப்பதை பார்த்த ஈஸ்வரன், அருகில் சென்று, ஈஸ்வரியின் அருகில் உட்கார்ந்து "ஏன், பெண்ணே? இப்படி சோக கவலையுடன் உட்கார்ந்திருக்கிறாய்?" என்று கேட்டார். அதற்கு ஈஸ்வரி சிவபெருமானை நோக்கி "சுவாமி! -

எனக்கு இன்று கவலையாகத்தான் இருக்கிறது; என் கவலையை, உங்களால் தீர்த்து வைக்க முடியுமா?" என்று கேட்டனள்.

அதற்கு ஈஸ்வரன் "பெண்ணே, பார்வதி! உலகத்தை படைப்பவனும் நான், அழிப்பவனும் நான், மானிடர்களின் பாவ விமோசனங்களை ஏற்பவனும் நான். அப்படியிருக்க; உன் கவலையை தீர்க்க என்னால் முடியாதா? என்னவென்று சொல்?" என்று கேட்டார்.

அதற்கு ஈஸ்வரி "நாதா! அந்தக் கவலையை உங்களிடம் சொன்னால், நீங்கள் தீர்த்து வைப்பதாக எனக்கு சத்தியம் செய்து கொடுங்கள்" என்றாள்.

அதற்கு ஈஸ்வரன் "பெண்ணே, ஈஸ்வரி! உலகத்து துயர்களையெல்லாம் தீர்ப்பவன் உன் துயரத்தையும் கண்டிப்பாக தீர்ப்பேன்; உண்மையைச் சொல்?" என்றார்.

அதற்கு ஈஸ்வரி, "நாதா! அப்படியானால் இதோ, சொல்கிறேன் கேளுங்கள்! தங்களுக்கும் ஐந்து சிரசு (தலை) பிரமாவுக்கும் ஐந்து சிரசு இருப்பதால், இந்த இருவரில், யார்? புருஷன் என்று எனக்குத் தெரியவில்லை; ஆகையால்,

உங்கள் இருவரில் யாரோ ஒருவர் ஐந்து சிரசில் ஒரு சிரசை எடுத்துக் கொள்ளுங்கள்; அப்போது நான், புருஷன்! என்று, தங்களை கண்டு கொள்ள உபாயம்" என்றாள்.

அதற்கு ஈஸ்வரன் "பெண்ணே, பார்வதி! இது என்ன நியாயந்தானே? என்னுடைய சிரசை, எப்படி நான் கிள்ளி எடுப்பது? பிரமாவின் சிரசைத்-தான் எப்படிக் கிள்ளியெடுப்பது? அப்படி அவர் சிரசைக் கிள்ளினால், உலகத்திற்கே பிரமம் உண்டாகி விடுமே. என்ன செய்வது?" என்றார்.

அதற்கு ஈஸ்வரி "நாதா! அதெல்லாம் எனக்குத் தெரியாது; உங்கள் இருவரில் யாரோ ஒருவர், ஒரு சிரசை எடுக்கவேண்டும்; அப்படி எடுக்காவிட்டால், நான் அக்கினியில் விழுந்து இறந்து விடுவேன்!" என்றாள்.

அதற்கு ஈஸ்வரன் "சரி. பெண்ணே! பிரமாவின் சிரசை எப்படி எடுப்பது?" அதற்கு நீயே ஒரு உபாயம் சொல்? என்றார்.

அதற்கு ஈஸ்வரி "நாதா! நீங்கள் உடனே சென்று பிரமாவின் சபையில் உட்காருங்கள்! அப்போது, அவர் சிரசின் நடுச்சிரசின் முகத்துப்பக்கம் ஒரு ஈ விளையாடிக் கொண்டிருக்கும், அதைப் பார்த்ததும் நீங்கள் பிரமாவை நோக்கி, முகத்தில், ஈ! விளை

யாருது என்று சொல்லுங்கள், அதற்கு அவர் உங்களை நோக்கி அந்த ஈ.யை பிடித்து, தலையை கிள்ளி எறியுங்கள் என்று சொல்வார்; நீங்கள் உடனே நீங்கள், ஈ./தலைக்கு பதிலாக அவர் தலையில் ஒன்றைக்-கிள்ளிவிட்டு, வந்து விடுங்கள்! என்றாள்.

இதைக்கேட்ட ஈ.ஷ்வரன் "சரி, பெண்ணே! அப்படியே செய்து விட்டு, வருகிறேன்" என்று பிர்மாவின் தேசம் சென்று, அவர் ஆலயத்தில் அவருடைய சபையில் போய் உட்கார்ந்து, பிர்மாவின் சிரசை பார்த்துக் கொண்டிருந்தார் ஈ.ஷ்-வரன். அப்போது, பிர்மாவின் நடுச்சிரசில், ஈ.! ஒன்று விளையாடியது. அதைக் கண்ட ஈ.ஷ்-வரன் பிர்மாவிடம் முகத்தில், ஈ.! விளையாடுவதாக சொன்னார். இதைக்கேட்ட பிர்மா ஈ.ஷ்-வரனை நோக்கி "அந்த ஈ.யை பிடித்து, ~~அதன்~~ தலையைக் கிள்ளி எறியுங்கள், என்றார்.

ஈ.ஷ்வரன், உடனே இது தான் சமையம் என்று, பிர்மாவின் தலையை ஒன்றை கிள்ளி எடுத்து விட்டார். பிர்மாவின் தலையைக் கிள்ளியதும், ஈ.ஷ்வரனுக்கு பிர்மம் உண்டாகி பூலோகமெல்லாம் இருண்டு, ஈ.ஷ்வரன் அதே இடத்தில் உட்கார்ந்து கொண்டார். மற்றும் அங்குள்ள -

தேவாதிகள் "ஈஸ்வரன் எதற்கு, இந்தமாதிரி செய்தார்? இதுயார் சொல்லிக் கொடுத்த தந்திரம்?" என்று, எல்லோரும் சந்தேகத்துடன் பார்த்து, அப்படியே நின்று கொண்டிருந்தார்கள்.

அப்போது, மகாவிஷ்ணு (கிருஷ்ணர்) பார்த்து, இது யார் சொல்லிக் கொடுத்து ஈஸ்வரன் இந்தக் காரியம், செய்தார்? என்று ஞானதிருஷ்டியில் பார்த்து ஈஸ்வரி வேலை தான் என்று தெரிந்து உடனே பால்கடலை விட்டு கைலாயம் சென்று ஈஸ்வரியிடம் சென்றார். விஷ்ணுவைக் கண்ட ஈஸ்வரி "வாருங்கள், அண்ணா! உட்காருங்கள்! என்று உபசாரம் செய்து சிம்மாசனத்தில் உட்கார வைத்தாள்.

பிறகு மகாவிஷ்ணு ஈஸ்வரியை நோக்கி "அம்மா, ஈஸ்வரி! நீ, ஈஸ்வரனிடம் பிர்மாவின் தலையை எடுக்கச் சொல்லி, அதன்படி அவர் பிர்மாவின் தலையை கிள்ளிவிட்டார். இப்போது, ஈஸ்வரனை பிர்மம் பிடித்துக் கொண்டது, அதனால் உலகமே பிர்மம் ஏற்பட்டு, இருண்டு விட்டது! அதனால், நீ, ஈஸ்வரனுக்கு சொல்லிக் கொடுத்து, இந்த மாதிரி செய்ததால் அந்த பிர்மத்தை நீயே வந்து வாங்கிக் கொள்" என்று ஈஸ்வரியை

கூட்டிக் கொண்டு பிர்மாவின் ஆலயத்திற்கு சென்று, ஈஷ்வரியை ஈஷ்வரன் நின்றிருந்தனர்.

அப்போது ஈஷ்வரி சிவபெருமானை நோக்கி "சாமி! நான் அறியாத புத்தியினால் பிர்மாவின் சிரசை எடுக்கச்-சொல்லி இப்போது உலகமே பிரமம் ஏற்பட்டு, இருண்டு போய் விட்டது; ஆகையால், உங்களுடைய கையில் இருக்கும் பிர்மாவின் சிரசை, என்னிடம் கொடுங்கள்" என்றாள்.

இதைக் கேட்ட ஈஷ்வரன் கண் விழித்துப் பார்த்து "பெண்ணே! நீ, எதற்கு இங்கு வந்தாய்?" என்றார்.

இதைக்கேட்ட ஈஷ்வரி "நாதா! நான் சொல்லிக் கொடுத்ததால் தானே, நீங்கள் பிர்மாவின் தலையைக் கிள்ளி எடுத்து; இப்போது, உங்களுக்கும், உலகத்துக்கும் பிரமம் ஏற்பட்டது; ஆகையால், நான் சொல்லிக் கொடுத்து செய்ததால், இப்போது அந்த பாவத்தை நானே அனுபவிக்கிறேன், என்னிடம் கொடுங்கள்!" என்றாள்.

அதற்கு ஈஷ்வரன் "பெண்ணே, பார்வதி! உலகத்தைப் படைக்கும் கடவுளாகிய, நானே பிரமம் பிடித்து இருக்கும் போது, அதை உன்னிடம் கொடுத்தால் உனக்கும் பிரமம் பிடித்துக் கொள்ளும்; பிறகு அந்தப்பாவம் என்னைப்பிடித்துக் கொள்ளும் வேண்டாம், பெண்ணே! போய் விடு," என்றார்.

இப்படி, ஈஸ்வரனும் ஈஸ்வரியும் தர்க்கம் பேசிக்
கொண்டிருக்கும் போது, மகா விஷ்ணு பார்த்து,
இன்னும் ஈஸ்வரன் இப்படி பிரமத்துடன் இருந்தால்
உலகம் பொறுக்காது என்று, உடனே ஈஸ்வரன்
கையில் இருந்த பிரமாவின் சிரசை எடுத்து,
ஈஸ்வரியின் கையில் கொடுத்து விட்டார்.

ஈஸ்வரியின் கையில் பிரமாவின் சிரசைக்-
கொடுத்ததும் ஈஸ்வரனுக்கு பிரமம் நீங்கி
ஈஸ்வரியை பிடித்துக் கொண்டது. இப்படி,
ஈஸ்வரிக்கு பிரமம் பிடித்ததும், பிரமாவின் ஆலய
த்தில் பயித்தியம் பிடித்தது போல் நடனமாடத்
தொடங்கி ஆடிக்கொண்டிருக்கும் போது, இதை-
க் கண்ட தேவர்களெல்லாம் பயந்து, நடுங்கி, அந்த
இடத்தை விட்டு அப்புறம் போய் விட்டார்கள்.
ஈஸ்வரன், ஒருவர் மட்டும் அங்கு இருந்தார்.

பார்வதி இப்படி ஆடுவதைப் பார்த்த ஈஸ்வரன்-
"பெண்ணே, பார்வதி! அக்காலத்தில் பூமாதேவியின்
மகள், ரேணுகா, தேவி! ரேணுகா தேவியின்
ரேணுகா தேவியின் மகள், நீ! ஈஸ்வரி. ஆகையால்
நீ தெய்வலோகம் விட்டு, பூலோகம் சென்று
அரசாண்டு வா!" என்றார்.
இதைக் கேட்ட பார்வதி "சுவாமி! நான் இதுநாள்

வரையிலும் தங்களிடம் இருந்து; இப்போது என்ன
பூலோகம் போகச் சொல்கிறீர்கள். நான் பூலோகம்
போவதால் உங்களையும் கொன்று விட்டுப் போகி
றேன் என்று ஈஸ்வரி, ஈஸ்வரனிடம் போராடினாள்.

ஈஸ்வரியின் கோபத்தைக் கண்ட ஈஸ்வரன் பயந்து, இனி
நாம் இங்கிருந்தால் நம்மைக் கொன்று விடுவாள்
என்று காடு, வனாந்தரமாக ஓடி ஓடினார். "சுவாமி!
நீங்கள் எங்கு போனாலும், விடமாட்டேன்" என்று
ஈஸ்வரி ஈஸ்வரனை துரத்திக் கொண்டு ஓடினாள்.
இதைக் கண்ட ஈஸ்வரன் "பார்வதி நம்மை எங்கு
போனாலும், விடமாட்டாள் போலிருக்கிறது" என்று
அந்த இடத்தில், அக்கினியை உண்டு பண்ணினார்.

அக்கினிக்கும் பயப்படாமல் ஈஸ்வரி, அக்கினி
யைத் தாண்டி துரத்திக் கொண்டு ஓடினாள்.
அப்போது ஈஸ்வரன் பார்த்து "கடலுக்கு அப்பால்,
போய் விட்டால் எப்படி வருவாளோ, பார்க்கலாம்?
என்று கடலுக்கு அந்தப்புறம் போய் நின்றார்.

இதைக் கண்ட ஈஸ்வரி "சுவாமி! கடலுக்கு அந்தப்-
புறம் போய் நின்று கொண்டீர்களா? இதோ!
நானும் தண்ணீரில் இறங்கி வருகிறேன்!" என்று
ஈஸ்வரி கடல் தண்ணீரில் இறங்கிப் போகும்போது
ஈஸ்வரன் பார்த்து "அடடா! கடல் தண்ணீரில் இறங்
கி வருகிறாளே! என்று பார்வதியை நோக்கி-
பார்வதி! அங்கு தண்ணீர் ஆழமாக இருக்கும்.

இறங்காதே! அங்கு ஆழமாக இருக்கும் இறங்கா-
தே!" என்று மூன்று முறை, சொன்னார்.

இதைக் கேட்ட பார்வதி, சிவபெருமானை நோக்கி-
"நாதா! உலகத்தில் நான் எத்தனையோ அவதாரம்
எடுத்தேன்; இப்போது நீங்கள் தண்ணீர், ஆழம்! என்று
சொன்னதால், இப்போது நான் அங்காள பரமேஸ்-
வரி!" என்று, ஈஸ்வரன் அருகில் சென்றாள்.

ஈஸ்வரி, ஈஸ்வரன் அருகில் சென்று "நாதா! நான்
இவ்வளவு காலம் உங்களிடமிருந்து, இப்போது
என்னை பூலோகம் போகச் சொல்கிறீரே! இனி உங்-
களை நான் எப்போது, பார்ப்பது?" என்றாள்.

அதற்கு ஈஸ்வரன் "பார்வதி! நீ திரும்பவும் என் முக
த்தை பார்க்க வேண்டுமென்றால், 12, மாதத்திலும் -
12, அமாவாசை, மாதம் 24, நட்சத்திரம், 12 வீடு
மாசி மாதம் சிவன் ராத்திரி காலை சூரியன் உதய
மாகும் போது, 7½ மணி, திருவோண நட்சத்திரம்,
அன்று உன் ஆலயத்தில் அழகு தெருசனம் என்று
நடத்துவார்கள்; அன்று தான் உன்னை வந்து நான்
பார்ப்பேன்! அதுவும் உன் முகத்தை நேரில் வந்து
பார்க்க மாட்டேன்! உன் முன்னால் இருக்கும் நந்தி
பின்னால் இருந்து தான் பார்ப்பேன் அதுசமயம் என்னை
நீ, பார்த்துக் கொள்ளலாம்!" என்றார்.

இப்படிச் சொல்லி விட்டு ஈஸ்வரன், ஈஸ்வரியை
நாலேணி வழியாக பூலோகத்திற்கு அனுப்பினார்.

ஈஸ்வரி பூலோகம் வந்து எட்டுத்திசையும் சுத்திப்பார்த்து, தான் இருக்கே நல்ல ஊர் இல்லாமல் மனம் கலங்கி நின்று "சரி! வடதேசம் போய், பார்க்கலாம்" என்று, வடதேசம் புறப்பட்டாள் அங்காள பரமேஸ்வரி.

வடதேசம் திருவண்ணாமலைக்கு அந்தப்புரம், செஞ்சிக்கோட்டைக்கு அந்தப்புரம், தண்ணி வந்தால் நிறையாது தலையனூர் ஏரி, மழை பெய்தால் நம்பாது (நிறையாது) மலையனூர் ஏரி. இந்த இரண்டு ஏரிக்கும், இரண்டு பட்டணம், ஒன்று தாயனூர் பட்டணம், இரண்டு, மலையனூர் பட்டணம் அங்காள பரமேஸ்வரி மேல் சொன்ன பட்டணங்களின் அங்குள்ள ஏரிக்கரை ஆங்கா வனச் சோலையில் அங்காள பரமேஸ்வரி நின்று பார்த்து "அடடா! நாம் இந்த புவனமெல்லாம் சுற்றிப்பார்த்து வந்தோம், இவ்வளவு, அழகான ஆங்கா வனத்தை/எங்கும் பார்க்கவில்லை; இனிமேல் நம்மளுக்கு இதுதான் சொந்த ஊர், சொந்த இடம். நாம் எங்குபோய் சுத்தினாலும் கடைசியில் இங்குதான் வரவேண்டும்! இந்தப் ஆங்கா வனத்தில் நாம் அங்காள பரமேஸ்வரி வந்திருப்பது, உலகத்தில்

ஒருவருக்கும், தெரியாது! நாம், ஒரு கல்லாக
பிறக்கலாமா? அல்லது செடி, கொடி, கத்தாளையாக
பிறக்கலாமா? அப்படி நாம் கல்லாய் பிறந்தால்,
கல்லுளிகள் நாடும், மரமாய் பிறந்தால் வாச்சுஉளி
கள் நாடும். செம்பாய் பிறந்தால் சிரணங்கள் நாடும்.
செடி, கொடியாய் பிறந்தால் சிற்றுளிகள் நாடும்.
ஆகையால் இந்த நான்கு விதமான பிறப்பு நாம்
பிறக்கக் கூடாது, இப்படிப் பிறந்தால் நம்முடை
மகிமை உலகுக்கே, தெரியாது! இந்த வனத்தில்
நாம் கொத்தினால் மீளாத, கோடியின நாகன்! தீண்டி
னால் மீளாத, செந்தலை நாகன்! கடித்தால் மீளாத,
கருந்தலை நாகன்! இப்பேர்ப்பட்ட பாம்பாய் நாம்
பிறந்து, இந்த வனத்தில் படமெடுத்து விளையா
டினால், இந்த வரியிலிருந்து தண்ணீர் கொண்டு
போக பட்டணத்தில் உள்ள ஜனங்கள் எல்லாம்
வருவார்கள்! 'பாம்பைக் கண்டால், படையும் நடுங்
கும்' என்ற பழமொழிபோல், நம்மைக் கண்டு
ஜனங்கள் பயப்படுவார்கள்! அவர்களைக் கண்டு
நாம் பயப்படுவோம்! ஆகையால், நாம் பாம்பாகத்
தான் இருக்கவேண்டும்", என்று, அங்காள பரமேஸ்வரி
யாகப்பட்டவள், அவ்வனத்தில் வடபுரத்தான்கோடியில்
கனறி கத்தாளை வனம், வண்டரிச்சு புத்து! செல்வரிச்ச

புத்து! கன்னிப்புத்து! ஒத்தக்கண் புத்து! இப்படி புத்துக்கண்ணில், ஓங்கி வளர்ந்தாள்!

இப்படி சிலநாள் இருந்து, ஒருநாள் ஈஸ்வரியாகப்பட்டவள் "நாம், இந்தப் புத்துக்கண்ணில் இருந்து கொண்டிருந்தால், நம்மளுக்கு யார்? பூஜை செய்ய வருவார்கள்? நம்மை யாருக்குத் தெரியுமென்று, உற்று நினைத்தாள், ஒருகோடி சிந்தனையில். பார்த்து நினைத்தாள் பலகோடி சிந்தனையில். அப்படி நினைக்கும் போது, அந்த தாயனூர் பட்டணத்தில், ஆயிரம் வீட்டுச் செம்படவர் இருந்தார்கள். அதில் ஒரு வீட்டுச் செம்படவன், பரம ஏழை! அவன் பிள்ளை குட்டியில்லாச் செம்படவன். அந்த ஆயிரம் வீட்டுச் செம்படவர்களும், வாரம் ஒருமுறை தாயனூர், மலையனூர் ஏரியில் மீன்பிடிப்பது வழக்கம். அதுபோல் இன்றும் ஆயிரம் வீட்டுச் செம்படவர்களும் மீன்பிடிக்கப்புறப்பட்டார்கள். இந்த ஆயிரம் செம்படவர்களுக்கும் பின்னால் பிள்ளையில்லாத ஏழைச் செம்படவன், "எல்லாருக்கும் நல்ல வலையிருக்கிறது! நம்மிடம் ஓட்டை வலையிருக்கிறதே? இதில் எப்படி மீன் பிடிப்பது?" என்று மனதில் விசனத்துடன் அவர்கள் பின்னால் சென்றான். ஆயிரம் செம்படவர்களும், அங்காள-

பரமசிவநீ இருக்கும் ஆங்கா வனத்தில் வரும் போது, ஈஸ்வரியாகப்பட்டவள் பிரசன்னமாகி புத்துக்கண் மேல் உட்கார்ந்து கொண்டு "இந்த, ஆயிரம் பேரில் நம்மளுக்கு பூஜை செய்ய யாரைப் பிடிக்கலாம்? ஆயிரம் பேரில் யாரைக் கூப்பிட் டாலும் வரமாண்டார்கள். எல்லோருக்கும் பின் னால் வரும் பிள்ளையில்லாத செம்படவனை பிடி த்தால் தான், நம்மளுக்கு நல்லது! அவனை நம்மிடம் எந்த விதமாகக் கூப்பிடலாம்? என்று யோசனை செய்து, நாம் என்ன வடிவெடுக்கலாம்? இளந்தோப்புச் சோலையிலே!" என்று சிந்தித்து ஒரு குழந்தைபோல், வடிவெடுத்தாள், ஈஸ்வரி!

குழந்தையாக வடிவெடுத்த ஈஸ்வரி அந்த வனத்தில் "கூவா! குவா!" வென்று அழுதாள். குழந்தை அழும் சத்தம் பிள்ளையில்லாச் செம் படவன் காதில் கேட்டு, மற்ற செம்படவர்களை நோக்கி, "அண்ணே! அண்ணே!! நாம வாரா, வாரம்/ இந்த தடத்தில் வந்து கொண்டிருக்கிறோம்! ஆனால் ஒரு முறை கூட இந்த மாதிரி குழந்தை அழுகும் சத்தம் கேட்டதில்லையல்லவா? ஆகையால், நான் பிள்ளையில்லாதவன், யாராவது என்னுடன்

துணைக்கு வாருங்கள்! அந்தக்குழந்தையைப்போய் எடுத்து வரலாம்!" என்றான்.

இதைக் கேட்ட மற்ற ஆயிரம் செம்படவர்களும் பிள்ளையில்லாச் செம்படவனை நோக்கி "அடே, அப்பா! யாராவது இந்த நடத்தில் தனியாக வந்தால், அவர்களை எடுத்து சாப்பிடக்கூடிய ராக்ஷச பூதங்கள்! பிசாசுகள்! எல்லாம் இவ்வனத்தில் நிறைய இருக்கிறது, இப்போது அவைகள் தான் குழந்தைபோல் கத்துகிறது, நாங்கள் வரமாட்டோம்!" என்றார்கள்.

இதைக்கேட்ட பிள்ளையில்லாத செம்படவன். "அண்ணே! நான் உங்களுடன் வந்தால் இந்த ஒட்டை வலையில், மீன் பிடிக்கவா போகிறேன்? மேட்டில் நின்று கொண்டு வேடிக்கை பார்ப்பவன் தானே? ஆகையால், நான் போய் குழந்தையை பார்த்து வருகிறேன்! நீங்கள் எல்லோரும் மீன் பிடிக்கப் போங்கள்!" என்று சொல்லி விட்டு, குழந்தை அழும் திசையை நோக்கி புறப்பட்டான்.

இதைக்கேட்ட மற்ற ஆயிரம் பேரும் "வாருங்கள்! அவன் செத்தால், என்ன? பிழைத்தால், என்ன? நாம் போகலா"மென்று, எல்லோரும், நதிக்கு மீன் பிடிக்கச் சென்று விட்டார்கள்.

பிள்ளையில்லாத செம்படவன் வனத்தில் குழந்தையைத்தேடி போகும் போது, அங்காள பரமேஷ்வரியாகப்பட்டவள் செம்படவன் கண்ணுக்கு தெரியாமல் வனம் விட்டு, வனம்/ மாறி, மாறி, செம்படவின நடுவனத்திற்கு கூட்டிச் சென்று விட்டாள். அங்கு சென்றும், கண்ணுக்கு தெரியவில்லை/

அப்போது பிள்ளையில்லாச் செம்படவன் "அடடா/ நம் அண்ணன் மார்கள் சொன்னதையும் கேளாமல் இங்கு வந்து, இப்போது பேயோ/ பிசாசோ/ நம்மை ஏமாற்றுகிறது!" என்று பயந்து, வந்த வழியில் திரும்பி ஓட்டம் பிடித்தான். அப்போது அங்காள பரமேஷ்வரி செம்படவன் ஓடுவதை பார்த்து "ஏது, செம்படவன், நம்மைக்கு பயந்து, ஓடிவிடுவான் போலிருக்கிறது!" என்று, ஒரு சிங்கமாக வடிவெடுத்து, செம்படவன் ஓடும் வழியில் குறுக்காட்டி நின்றாள் ஈஷ்வரி/

ஓடி வந்த செம்படவன் சிங்கத்தை கண்டு பயந்து! மயங்கி பூமியில் விழுந்தான். இதைக்கண்ட ஈஷ்வரி" நாம் சிங்கமாக இருந்தால்! இவன் பயந்து இறந்து விடுவான்," என்று சிங்கமாக இருந்த உருவத்தை விட்டு 10 வயது பிராமணப் பெண் போல் மாறி நின்றாள்/

சிறிது நேரத்தில் செம்படவன் மயக்கம் தெளிந்து எழுந்து, மேற்சொன்ன, பிராமணப் பெண்ணைக் கண்டு! "அடடா! நாம் சிங்கத்தை கண்டு பயந்ததற்கு, தெய்வ லோகத்திலிருந்து ஏதோ ஒரு பெண் வந்து நம் உயிரை காப்பாற்றி விட்டது! என்று அந்தப்-பெண்ணுக்கு நமஸ்காரம் செய்தான்.

அப்போது ஈஸ்வரி அவனை நோக்கி" அப்பா, செம்படவா! நீ பயப்பட வேண்டாம்! உனக்கு உற்றதுணை நான்; நீ எனக்கு பூஜை செய்யும் பூசாரியாக, எப்போதும் இருக்க வேண்டும்!" என்றாள். அப்போது செம்படவன் ஈஸ்வரியை நோக்கி" அம்மா தாயே! எனக்கு பூஜை செய்ய தெரியாதம்மா! நான் நித்தம் வலை வீசி, நெடு-நாளாய் மீன் பிடிப்பவன்; நான் பிள்ளையில்லாத செம்படவனம்மா! எனக்கு வலையும் ஓட்டை வலை! மீனும் கிடைப்பதில்லை, என்னுடைய சித்தப்பன், பெரியப்பன், மீன் பிடித்து மேட்டில் போட்டு, அவர்கள் எடுத்துச் சென்ற பின், அதில் தப்பிக் கிடக்கும் மீன்களை எடுத்துச் சென்று, அதை விற்றுப் பிழைப்பவன், நான்! என்னை பூஜை செய்ய வாசச் சொல்கிறாயே?

எனக்கு பூஜை செய்ய தெரியாதும்மா! என்றான்.

இதைக்கேட்ட ஈஸ்வரி செம்படவனை நோக்கி. "எப்பா! உனக்கு மீன் கிடைப்பதில்லையென்று சொல்கிறாயே? இன்று நிறைய மீன் கிடைத்தால்! எனக்கு பூஜை செய்ய வருகிறாயா? என்று கேட்டாள்.

இதைக்கேட்ட செம்படவன் "தாயே! உன்னுடைய கிருபையில் எனக்கு மீன் கிடைத்தால், நான் உனக்கு பூஜை செய்ய, வருகிறேன்! என்றான்.

இதைக்கேட்ட ஈஸ்வரி மருந்திலும் மருந்து திருகாட்டு கருமருந்தெடுத்து மந்திர உபதேசம் சொல்லி, கருமருந்தை செம்படவன் கையில் கொடுத்து "அப்பா, மகனே! இந்த மருந்தைக் கொண்டு போய், குன்றாங் கல்மேல் நின்று ஏரியில் மருந்தை வீசி, உன்னுடைய ஓட்டை வலையை எடுத்து, தண்ணீரில் வீசு! உனக்கு மீன் கிடைக்கும்! என்றாள்.

உடனே செம்படவன் மருந்தை வாங்கிக் கொண்டு ஏரிக்குச் சென்றான். முன் சென்ற ஆயிரம் செம்படவர்களுக்கும் ஒரு மீன் கிடைக்காமல் அங்காள பரமேஸ்வரி செய்துவிட்டாள். மேற் சொன்ன பிள்ளையில்லா செம்படவன் ஏரிக்குச் சென்று ஒரு குன்றாங்கல் மேல்

நின்று, ஈ.ஸ்வரி கொடுத்த கருமருந்தை ஏரியில் போட்டு ஓட்டை வலையை எடுத்து வீசியதும், அதில் ஒரு பெரிய வாளைமீன் சிக்கியது! இதை மற்ற ஆயிரம் செம்படவர்களும் பார்த்து, "நாம் காலையிலிருந்து மீனுக்கு வலை போடுகிறோம், ஒரு மீன் கிடைக்கவில்லை, இவனுக்கு வலையை போட்டதும் பெரிய மீன் கிடைத்து விட்டதே! என்று, எல்லோருமாக சேர்ந்து, ஒரு தந்திரம் செய்து. பிள்ளையில்லாச் செம்படவனை நோக்கி-

"அய்யா! இந்த ஏரியில் உள்ள நீர்! எப்படி எல்லோருக்கும் சொந்தமோ! அது போல், இந்த மீனும் எல்லோருக்கும் சொந்தம்! ஆகையால், இந்த மீனை அறுத்து, ஆள்,பிரகாரம் பங்கு போட வேண்டும்." என்றார்கள்.

இதைக்கேட்ட பிள்ளையில்லாச் செம்படவன் மற்றவர்களை நோக்கி "அண்ணன் மார்களே! நாம் எல்லோரும் வீட்டிலிருந்து வரும் போது, வழியில் குழந்தை ஒன்று அழுததல்லவா? அதைப் போய் எடுத்து வருவோம் என்று, கூப்பிட்டேன்! அதற்கு நீங்கள் பேயோ, பிசாசோ என்று மறுத்து விட்டீர்கள். நான் செத்தாலும் சரி யென்று ஒருவன் மட்டும் போனேன், ஆகையால், நான் இந்த மீனில் உங்களுக்கு பங்கு கொடுக்க மாட்டேன்! என்றேன்.

அதற்குள் பொழுது அஸ்தமான நேரம் ஆகிவிட்ட
தால் எல்லாச் செம்படவரும் பிள்ளையில்லாச் செம்ப
டவனை விட்டுவிட்டு, எல்லோரும் அவரவர்கள்
வீட்டுக்குச் சென்று விட்டார்கள்.

அப்போது பிள்ளையில்லாச் செம்படவன் அந்தப் பெரிய
மீனை ஏரியிலிருந்து எடுக்க முடியாமல் கஷ்டப்பட்டு-
க் கொண்டிருந்தான். இப்படி இவன் கஷ்டப் படுவதை
கண்ட அங்காள பரமேஸ்வரி "அடடா! இந்தச்
செம்படவன் மீனை எடுக்க மாட்டான் போல் இருக்கி
றது! நாம் போய் எடுத்துக் கொடுக்கலாம்" என்று,
90, வயது கிழவியைப் போல், சடையும், முடியும்
தொங்க! தடியை ஊணிக் கொண்டு ஏரிக்கரைமேல்
நடந்து வந்து செம்படவனை நோக்கி "என்னடா,
மகனே! பொழுது போன நேரத்தில் தண்ணீரில் நின்று
தளித்துக் கொண்டிருக்கிறாய்?" என்றாள்

அதற்கு செம்படவன் "அம்மா, தாயே! ஸ்ரீ. ஈஸ்வரி
சொன்ன பிரகாரம் பெரிய மீன்! கிடைத்தது!
அதை மேலே எடுக்க முடியாமல் தான் நின்று தளித்து
க் கொண்டிருக்கிறேன்" என்றான்.

அதற்கு, அங்காள பரமேஸ்வரி "அப்பா, மகனே!
அந்த வலையை என் கையில் கொடுத்து விட்டு

நீ, கரையேறி மேலே வா!" என்று சொல்லி ஈஸ்வரி வலையை பிடித்து மீனை மேலே இழுத்துப் போட்டு பார்க்கும் போது, சந்திர சூரியன் போல் அழகுடன் இருந்தது, மீன்! பிறகு, ஈஸ்வரி செம்படவனை நோக்கி "அப்பா! இந்த மீனை எடுத்துச் சென்று தாயனூர், மலையனூர் சந்தையில் விற்று விடு! அப்படி விற்கும் போது, மீனின் வயிற்றை கிழித்து, அதன் உள்ளே இருக்கும் குடலை எடுத்துக் கொண்டு, குடுத்து விடு! மீனை விற்று சாப்பாட்டுக்கு வாங்கி உன் வீட்டில் குடுத்து விட்டு, அபிஷேக சாமானம் வாங்கி வந்து எனக்கு பூஜை, செய்!" என்று சொல்லி விட்டு, ஈஸ்வரி மீன் போல் புத்துக்கண்ணில் பிரசன்னமாக இருந்தாள்.

ஈஸ்வரி போனபின், செம்படவன் மீனை எடுத்து தோளில் வைத்து, தாயனூர் பட்டணம், மலையனூர் பட்டணம் சந்தைத் தெருவில் விலை கூறிக் கொண்டு போகும் போது, அந்தப் பட்டணத்தில் உள்ளவர்கள் ஒரு பத்து(10)ப் பேர் சேர்ந்து, அந்த மீனை விலைக்கு வாங்கிக் கொண்டார்கள்.

மீனை விலைக்கு வாங்கியவர்கள் "செம்படவா! இந்த மீனை சுத்தம் செய்து கொடப்பா! என்று

செம்படவனிடம் கொடுத்தார்கள்.
செம்படவன் அந்த மீனை வாங்கி வயிற்றைக்
கிழிக்கும் போது, அந்த மீன் வயிற்றில் ஒரு
ஆண், குழந்தை! இருந்தது. அதைக் கண்ட
பட்டணத்துச் ஜனங்கள்! "அடடா! பிள்ளையி
ல்லாத செம்படவனுக்கு, மச்சம் (மீன்) வயிற்றிலி
ருந்து, குழந்தை கிடைத்து விட்டது!" என்று
எல்லோரும் குழந்தைக்கு, பால்! காசு வீட்டுக்கு
4, அணா கொடுத்தார்கள். செம்படவன் குழந்தை
யை எடுத்துக் கொண்டு பால்காசுகளையும் வாங்
கிக் கொண்டு, தன்னுடைய வீட்டுக்கு புறப்பட்டான்
இவன் வீட்டுக்கு போகும் போது, அங்குள்ள
வர்கள், இந்தச் செம்படவன் வலைக்கிற்கு
சென்றவன் திரும்பி வராததால், இறந்துவிட்
டான்! என்று நினைத்து. ஊர் ஜனங்கள் எல்
லோரும் சேர்ந்து செம்படவன் வீட்டில்
கருமாதிச் சீர் செய்து கொண்டிருந்தார்கள்.

அப்போது, இந்தச் செம்படவன் வீட்டின்
அருகில் வருவதைப்பார்த்து, "உயிருடன், வரு
கிறான்! என்று ஊர் ஜனங்கள் சீர் செய்வ
தை விட்டு. அவரவர் வீட்டுக்கு சென்
றார்கள்.

செம்படவன் தன் வீட்டுக்கு சென்றதும் தான் கொண்டு வந்த பணத்தையும், குழந்தையையும், தன் மனைவியிடம் கொடுத்தான். இதைக் கண்ட அவன் மனைவி, "நாதா! இவ்வளவு பணமும்! இந்த குழந்தையும், உங்களுக்கு ஏது?" என்று கேட்டாள்.

அதற்கு செம்படவன் "பெண்ணே! தாயனூர்! மலையனூர்! பூங்கா வனத்திலிருக்கும், அங்காள பரமேஸ்வரி, கொடுத்தாள்! அந்த ஈ.ஸ்வரிக்கு இப்போது பூஜை செய்ய நான் போகவேண்டும்! என்றான்.

அதற்கு செம்படவன் மனைவி "நாதா! நீங்கள் அங்கே போக வேண்டாம்! அது பேயோ, பிசாசோ, நாயோ, நரியோ தெரியவில்லை அந்த ஈ.ஸ்வரியிருக்கும் இடத்தில் போனால் தானே, பூஜை செய்ய வரவில்லையென்று? கேட்கும் நாளையிலிருந்து வேறு இடத்தில் போய் மீன் பிடித்து வரலாம்!" என்றாள்.

அதற்கு செம்படவன் "அடி, பெண்ணே! பேய், பிசாசாக இருந்தால், கையில் சூலம் இருக்குமா? கபாலம் இருக்குமா? அது உண்மையான ஈ.ஸ்வரி தான்! அவளுக்கு நான் பூஜை செய்ய போக வேண்டும்!" என்றான்.

அதற்கு மனைவி, "நாதா! உண்மையான தெய்வம் என்று சொல்கிறீரே? அப்படியானால் எனக்கு குழந்தையில்லாதவருக்கு இந்தக் குழந்தையைக் கொண்டு வந்து கொடுத்தீர்களா? ஆகையால், இப்போது என் மார்! சுரந்து பால் குழந்தையின் வாயில் போய் விழுக வேண்டும்! அப்படித்தான் அது உண்மையான தெய்வம்," என்றாள்.

இதைக் கேட்ட செம்படவன், உடனே கொஞ்சம் விபூதியை எடுத்து ஈ.ஷ்வரியை கும்பிட்டு மனைவி மேல் போட்டான். அப்போது ஈ.ஷ்வரியின் கிருபையால், செம்படத்தியின் மாரில் பால் சுரந்து, குழந்தையின் வாயில் போய் விழுந்தது. இதைக் கண்ட செம்படத்தி "அய்யோ, நாதா! நான் தெரியாமல் எப்படியெல்லாமோ பேசிவிட்டேன், என்னை மன்னித்து, உடனே நீங்கள் போய் அந்த ஈ.ஷ்வரிக்கு பூஜை செய்துவிட்டு வாருங்கள்," என்றாள்.

செம்படவன் உடனே பூஜைக்கு புறப்பட்டான். செம்படவன் பூஜைக்கு புறப்பட்டு வருவதை பார்த்து அங்கான பரமேஷ்வரியாகப்பட்டவள் பார்த்து, "ஆகா! செம்படவன் நம்மளுக்கு பூஜை செய்ய

வருகிறான்! ஆகையால் நாம் மளிகைக் கடை வைக்க வேண்டு"மென்று. தாயனார், மலையனார் பட்டணத்தில் உள்ள ஆயிரம் கடையில் தானும் ஒரு கடை வைத்து பாட்டி யென்ற பேருடன் கடையில் உட்கார்ந்திருந்தாள்.

செம்படவன் கடை வீதிக்கு வந்து எல்லாக் கடையிலும், அபிஷேக சாமானம் கேட்டான். அதற்கு அவர்கள் "அப்பா, செம்படவா! எங்கள் கடையில் அபிஷேக சாமானமில்லை, அதோ, பார்! பாட்டி ஒருவள், கடை வைத்திருக்கிறாள்! அங்கே போய் கேட்டுப்பார்!" என்றார்கள். செம்படவன் உடனே அந்த பாட்டி கடைக்குச் சென்று "அம்மா, பாட்டி! அபிஷேக சாமானங்கள் கட்டிக் கொடு!" என்றான்.

இதைக் கேட்ட பாட்டி "அப்பா, பூசாரி! என்ன சுவாமிக்கு, அபிஷேக சாமானம் வேண்டும்?" என்றாள். இதைக்கேட்ட செம்படவன் "பாட்டி! அங்காள பரமேஸ்வரிக்கு, அபிஷேக சாமானம் வேண்டும்!" என்றான்.

அதற்கு பாட்டியானவள் "அப்பா, பூசாரி! எத்தனையோ பேர் வந்து மாரியாத்தா! காளியாத்தா! என்று சாமானம் வாங்கிக் கொண்டு, போகிறார்கள்;

ஆனல், அங்காத்தாள் என்று யாரும் இதுவரை சொன்னதில்லை; ஆகையால், இந்த அங்காள பரமேஸ்வரி யென்பது எங்கப்பா இருக்கிறது?" என்றாள்.

அதற்கு செம்படவன் "அம்மா, பாட்டி! அந்த தெய்வம் தெய்வலோகத்திலிருந்து வந்து! நாங் காவனத்தில் புத்துக்கண்ணாக வளர்ந்திருக்கிறது! அதற்கு பெயர்தான் அங்காள பரமேஸ்வரி! என்றான். இதைக்கேட்ட பாட்டி "சரி, நல்லது! என்று அதற்கு வேண்டிய சாமானங்கள் கட்டி வைத்து, ஒரு புதிய கூடையில், பொங்கல் பானை யொன்று புதியது, பச்சை அரிசி, தேங்காய், பழம், கோல வர்ண சித்தாடை, வாழைப்பூ சித்தாடை, என்னுவர்ண சித்தாடை, பழமான பாக்கு, மடல் சேர்ந்த வெற்றிலை, அத்தர், பன்னீர், ஏலம், கிராம்பு, நெய், இனிமையான சர்க்கரை, கதலி எலுமிச்சன், கன்னிசீர் வெம்பரசு, வேரில் பழுக்கும் பலாப்பழம், தேன்கனி, மாங்கனி, ஏஸ்தானி, செங்கரும்பு இப்படி வேண்டுமென்ற சாமானங்களை, கூடையில் அடுக்கி வைத்துவிட்டு, பாட்டியாகப்பட்டவள் செம்படவனை நோக்கி "அப்பா குமாரமே! இந்த சாமானங்களை புத்துக்கண்ணுக்கிட்ட கொண்டுபோய்

கரும்பால் பந்தல் கால் நிறுத்தி, வெற்றிலையால் பந்தல் போட்டு, தென்னங் கமுகு, பாளை, இளநீர், காட்டுத் துறை யெடுத்து, காவேரி தீர்த்தம் நாட்டமுடன் கொண்டு வந்து, நெய் பொங்கல், பால் பொங்கல், சர்க்கரைப் பொங்கல், வெண் பொங்கல், தயிர்ப் பொங்கல் இப்படி ஐந்து விதமான பொங்கல் வைத்து, நன்றாக பூஜை செய்தாயானால் உனக்கு நித்தப்படி நிறையான செல்வம் தருகிறேன்! சந்திர சூரியன் தவறினாலும், பூமி மனது தவறினாலும் பூஜைமட்டும் தவறக் கூடாது" என்றாள்.

செம்படவன் சரியென்று சாமான்களை எடுத்துக் கொண்டு போய் மேற் சொன்ன பிரகாரம் பந்தல்போட்டு ஐந்து விதப் பொங்கல் வைத்து ஈஸ்வரிக்கு பூஜை முடித்து கைகட்டி, வாய் பொத்தி "அம்மா தாயே! பூஜை யெல்லாம் முடித்து விட்டேன்! நான் செய்த பூஜை யெல்லாம் உனக்கு சந்தோசமா தாயே? என்றான்.

அப்போது ஈஸ்வரி செம்படவனை நோக்கி "அப்பா, பூசாரி! நீ, செய்த பூஜை யெல்லாம் எனக்கு சந்தோசம்! நீ கடையுடன் வைத்தாலும்

குணமாக பூஜை கொள்வேன். பாளையுடன் வைத்தாலும் சந்தோசமாக பூஜை கொள்வேன்" என்றாள் ஈஸ்வரி! அதற்கு பூசாரி " அம்மா, தாயே! எனக்கு நித்தப்படி நிறையான, செல்வம்! கொடுப்பதாக சொன்னாயே? அந்த செல்வத்தை கொடு, தாயே! என்றான்.

அதற்கு அங்காள பரமேஸ்வரியாகப்பட்டவள் கபாலத்தை (பிர்மாவின், சிரசு) எடுத்து " இந்தா, மகனே!" என்று செம்படவன் கையில் கொடுத்தாள். அதைப்பார்த்த செம்படவன் " அம்மா, தாயே! இதை நான் என்ன செய்வது?" என்று கேட்டான்.

அதற்கு ஈஸ்வரி " அப்பா! இதைக் கொண்டு நீ சென்ற இடமெல்லாம், சிறப்பாய் இருப்பாய்! இந்த நாட்டில் உனக்கு பிள்ளைக்காணிக்கை யென்று வீட்டுக்கு 4, அணா கொடுப்பார்கள்! மருத்துவ கூலி யென்று நெல்லைத் தானியம் கொடுப்பார்கள்! என்று வாழ்த்தி வரம் கொடுத்தாள்! மந்திரத்தை யும் கொடுத்தாள்! அப்பா, பூசாரி! எனக்கு பூஜை மட்டும் எப்போதும் தவறாமல் செய்து, விடு!" என்றாள். பூசாரி கபாலத்தை சந்தோசமாக பெற்றுக் கொண்டு, அன்று முதல் அங்காள பரமேஸ்வரிக்கு நித்திய பூஜை தவறாமல் செய்து வந்தான்.

1/ ஓம்,

## வாங்கிய கடன் கொடுக்காத, வள்ளாலராஜன் கதை.

அங்காள பரமேஸ்வரி! "பூஜை செய்ய பூசாரி ஒருவனை பிடித்து விட்டோம்! இனி நாம் இங்கு புத்துக் கண்ணில் இருந்து கொண்டிருந்தால், உலகத்தின் தர்மம்! அதர்மம்! இவைகளை பார்க்க முடியாது; ஆகையால் இந்த வடதேசத்தை விட்டு, தென்தேசம் போய் பார்க்க வேண்டுமென்று அங்காத்தாள் மனதில் நினைத்து, தன்னுடைய ஆயிரத்தெட்டு திருவடிவில் ஒரு திருவென்ற வடிவம் கொண்டு! வேரில்லாத கொடிப் பிருங்கி வர்ணமாக சடை பின்னி. ஆகாசக் கொடிப்பிருங்கி அழகான சடை பின்னி, பொன் ஐங்குறச் சடை பொன் மயிலாள் தானெடுத்து, நாகாஸ்ப் பூப் போல் நரைத்த கிழவி! தும்பப்பூப்போல் துவண்ட கிழவி! முருங்கக்காய் போல் முன்னொரு சடையழகு, பயிற்றங்காய் போல் பத்து லக்ஷம் சடையழகு அவித்துக்காய் போல் ஐந்து லக்ஷம் சடையழகு, நடையும் முடியுடன் தன்னுதிக் கோலம்! கொண்டு, கண்ணும் தெரியாமல், காதும் கேட்காமல், நடக்க முடியாமல் தள்ளாடித் தடியூன்றி, தவழ்ந்த நடை நடந்து! அங்காளம் சோலையை விட்டு புறப்பட்டாள். அங்கிருந்து தயனூர், மலையனூர் வீதியில் பாப்பார வீதியில் பட்டத்துயில் பொதுகி

செட்டியார் வீதியில் செருப்பில் பொறுக்கி, கண்ணார வீதியில் கந்தை துணியுடுத்தி, கையில் கபாலத்துடன், இடுப்பில் குறக்கூடை வைத்து, ஒருகையில் குடுகுடுப்பை, ஒருகையில் மண்டையோடு எடுத்து, வடதேசம் விட்டு, ஈஸ்வரி தென்தேசம் நோக்கி புறப்பட்டாள். வாடபுரம் பட்டணத்தில் குறியாடி விளையாடி வந்தாள்! அந்தப் பட்டணம் விட்டு, வில்வேசன் பட்டணம்! அதுவிட்டு காமபோதி பட்டணம்! கூலிக்காரர் வீதியில் குறம் பாடி விளையாடினாள். அந்தப் பட்டணத்து ஜனங்களை நோக்கி, "அம்மா, தாய்மார்களே! தர்மம், கொடுங்கள்?" என்றாள் ஈஸ்வரி.

இதைக் கேட்ட அவ்வூர் ஜனங்கள் "அம்மா, பாட்டி! எங்கள் வீட்டில் தர்மம் கொடுக்க ஒன்றுமில்லை. நாங்கள் அன்றாடம் கொண்டு வந்து சாப்பிடுகிறவர்கள்; ஆகையால் அதோ, பார்! பக்கத்தில் ஒரு ராஜாவின் கோட்டையிருக்கிறது! அங்கு போனால் உனக்கு வேண்டிய அளவு தர்மம் கொடுப்பார்கள், பாட்டி!" என்றார்கள்.

அதற்கு அங்காள பரமேஸ்வரி "அம்மா, தாய்மார்களே! அந்த ராஜா வீட்டுக்கு எந்த வழியிலம்மா போவது?" என்றாள்.

அதற்கு ஜனங்கள் "பாட்டி! இங்கிருந்து தெற்கு திசையாக வே போ! அங்கு போகலாம்" என்றார்கள்

இதைக்கேட்ட அங்காள பரமேஸ்வரி "சரி, நல்லது", என்று அரசனுடைய கோட்டையை நோக்கி புறப்பட்டாள்.

மேற் சொன்ன ராஜன் வாங்கிய கடன், கொடுக்காத வல்லாள ராஜன்! குடுத்த கடன் கொடுக்காத குமார ராஜன்! அவர் சாகாத வரமும், வேகாத கட்டையுமாக வரம் பெற்றவர்! ஆதிகாலத்தில் அது, வல்லாள ராஜன் பட்டணம்! இக்காலத்தில் அது, மதுராபுரி! பட்டணமாக விளங்குகிறது

அக்காலத்தில் வல்லாள ராஜன் தங்கச் சிம்மாசனம் வைத்து, தங்கக் கொடி நாட்டி, அரசு செய்தான். "நாம் சாகாத வரமும், வேகாத கட்டையும் வரப்பிரசாதம் பெற்றிருக்கிறோம்! நம் நாட்டுக்குள், கோட்டைக்குள், யாரும் வரக்கூடாது. பிச்சைக்காரன், தட்டுவான், கொட்டுவான், ஆடுவான், பாடுவான், இறக்கப்பட்டது, எண்ணாயிரம், புறக்கப்பட்டது பண்ணீராயிரம், இவர்கள் யாரும் நம் கோட்டைக்குள் வரக்கூடாது என்று, நாலுபக்கமும் காவல் வைத்திருந்தான் அந்தச் சண்டாளன்! இதையெல்லாம் மீறி யாராவது கோட்டைக்குள் யாராவது வந்தால், அவர்களை பிடித்து சாப்பிடும்படி, ஆண் முனி! பெண் முனி! இரண்டையும் காவல் வைத்திருந்தான்.

இப்போர்ப்பட்ட, ராஜன்! கோட்டையின் முன் அங்காள பரமேஸ்வரி வந்து நின்றாள். ஈஸ்வரியை கண்ட முனிகள் இரண்டும் "அம்மா, பாட்டி! இங்கு எதற்கு வந்தாய்? வேறு ஏதாவது ஊருக்கு போ!" என்றது, முனிகள்.

அதற்கு அங்காள பரமேஸ்வரி "அப்பா, முனிகளே! இந்தக் கோட்டையின் உள்ளே போக வேண்டும்! எனக்கு வழி விடுங்கள்!" என்றாள்.

அதற்கு முனிகள் "அம்மா, பாட்டி! உன்னை இந்தக் கோட்டைக்குள் விட்டால், எங்க ராஜா! உன்னையும் தண்டித்து விடுவார், எங்களையும் தண்டித்து விடுவார்" என்றது முனிகள்.

அதற்கு அங்காத்தா "அப்பா, முனிகளே! என்னை தண்டித்தால் பரவாயில்லை, எனக்கு உள்ளே போக வழி விடு!" என்றாள். இதைக் கேட்ட முனிகள் இரண்டும் கோபமடைந்து, "அம்மா, பாட்டி! நீ உள்ளே வந்தால், நாங்கள் உன்னை பிடித்து ஆண் முனியும், பெண் முனியும் பங்கு போட்டு சாப்பிட்டு விடுவோம்!" என்று, முனிகள் சொன்னதும் அங்காள பரமேஸ்வரிக்கு கோபம் வந்து, "நம்முடைய சக்தியை, இந்த முனிகளுக்கு காட்ட வேண்டு"மென்று

மருந்திலும் மருந்து சுடுகாட்டு கருமருந்தை எடுத்து, ஐந்தெழுத்து மந்திரத்தை அச்சினமே மந்திரித்து, மூன்றெழுத்து மந்திரத்தை முன்னதாக மந்திரித்து, அக்கினி மந்திரத்தை அங்கம்மாள் மந்திரித்தாள். இப்படி ஏ.வைவரி மந்திரிக்கும் போது முனிகள் இரண்டும் தீப்பற்றி எரிந்தது!

அப்படி தீப்பிடித்து எரியும் போது முனிகள் இரண்டும் வேதனை பொறுக்க முடியாமல் "அடடா, இந்தப் பாட்டியின் சுருவம் தெரியாமல் பேசிவிட்டோம்; இவளிடம் மன்னிப்புக் கேட்க வேண்டுமென்று அம்மா, பாட்டி! எங்கள் தேகமெல்லாம் எரிந்து விடும் போல் இருக்கிறது. ராஜாவின் கட்டளைக்கு பயந்து, நாங்கள் காவல் இருக்கிறோம் ஆகையால், எங்களை மன்னித்து விடு!" என்றது முனிகள். இதைக் கேட்ட அங்காத்தா "அப்பா, முனிகளே! உங்களை மன்னிக்க வேண்டுமென்றால் நீங்கள் எனக்கு கல்லுக் காவேரி உள்ள மட்டும், சந்திர சூரியன் உள்ள மட்டும், ஆண் பெண் உள்ள மட்டும், பில் பூடு உள்ள மட்டும் அங்காளம்மனுக்கு முன்னேடும் பிள்ளையாக இருப்பதாக சத்தியம் செய்து கொடுங்கள்! நான் உங்களை மன்னிக்கிறேன்" என்றாள்.

இதைக் கேட்ட முனிகள் இரண்டும், "அம்மா, தாயே! நீ சொன்ன பிறகாலம் உனக்கு முன்னேயும் பிள்ளையாக இருக்கிறோம் என்று சத்தியம் செய்து கொடுத்தது.

இதைக் கேட்ட அங்காள பரமேஸ்வரி "சரி நல்லது! என்று, ஈஸ்வரியாகப்பட்டவள் முனிகளின் விலங்கினை கத்தரித்து விட்டு, அப்பா முனிகளே! இனி நீங்கள் இங்கு இருக்க வேண்டாம்! வடநாடு சென்று தாயனூர், மலையனூர் சென்று, அங்குள்ள பூங்கா வனத்தில் இருக்கும் புற்றுக்கண்ணில் போய் இருங்கள்! நான் வர இன்னும் இரண்டு மூன்று நாள் ஆகும், என்று சொல்லி முனிகள் இரண்டையும் தாயனூர் மலையனூர் நாட்டி விட்டாள் ஈஸ்வரி. பிறகு, கோட்டையின் உள்ளே நுழைந்து ராஜாவின் அரண்மனை முன் போகும் போது "நாம் பேசாமல் இப்படியே போகக்கூடாது. ஒரு குறி! பார்த்து சொல்லிக் கொண்டு போக வேண்டு"மென்று வரும் போது,

வல்லாள ராஜன் அரண்மனையில் வல்லாள ராஜனுக்கு ஐந்து மனைவிகள். இந்த ஐந்து பேருக்கும் குழந்தையில்லை. அவர்கள் எப்படியென்றால்? "நம் கணவரே தர்மம் செய்வதில்லை, நாம் ஏன் தர்மம் செய்ய வேண்டு மென்று

அவர்கள் சாதம் சாப்பிட்ட வட்டலில் சாதமிரு ந்தால், அவைகளை காக்கை, குருவிகள் சாப்பிட்டு பிழைத்துக் கொள்ளும் என்றும். ஈ. எறும்புகள் சாப்பிட்டு பிழைத்துக் கொள்ளும் என்றும். அவைகளை பூமியில் குழிவெட்டி குழிக்குள். வட்டல் தண்ணி பத்துப் பாத்திரம் கழுவும் தண்ணிகளை எல்லாம் ஊத்தி மேலே மூடிகல் போட்டு மூடிவிடுவார்கள் இத்துரியோதிரன் மனைவிமார்கள்.

அப்போது. அந்த வீதியில். அங்காள பரமேஸ்வரி குறி சொல்லிக் கொண்டு வந்தாள். எப்படியென்றால்? -

'நான் வடக்கு வடதேசமம்மா,
வாழ்கொண்ட வடபுரம்

நீடுபனிப் பெயும் மூகம் காணாத் தேசமம்மா,

பச்சைப் பனிப் பெயும் மலையாள் தேசமம்மா

வருத்த மூத்து விளையுமந்த
வடநாட்டுக் குறத்தியம்மா

சென்னிமலை சிவன்மலை சேவகிரி மலையம்மா

இந்த நாட்டுக் குறத்தியெல்லாம்
பொய் சொல்லுவாங்க

நான் தெய்வலோக குறத்தியம்மா
உண்மை சொல்வேன் கேளுமம்மா.

நான் இல்லாத வீடறிவேன்
இருக்கும் திண்ணையறிவேன்

நான் உண்டு மென்ற பேர்களுக்கு
ஒளி விளக்காய் தோன்றிடுவேன்

நான் இல்லை யென்ற பேர்களுக்கு
எள்ளளவும் தங்கேனம்மா.

நான் பார்த்தவற்கு பதேசையம்மா
என்னை பகைத்தவற்கு குலகாரி

நான் கொன்று விட்டு இல்லையென்பேன்
கூட நின்று மாரடிப்பேன்

நான் மாரடித்த கூலி யெல்லாம்
மடிமேல் வாங்கிடுவேன்

இன்னும் குறி சொல்வேனம்மா
இன்பமுள்ள குறிகளம்மா

வசனம்.
அம்மா, தாய்மார்களே! அம்மனிமார்களே! நீங்கள்
மனதில் நினைத்த குறி மாறுமல் சொல்வேனம்மா!

பாட்டு,
நீங்கள் நெஞ்சில் நினைத்த குறி
நிச்சயமாய் சொல்லுவேனம்மா,

இன்னும் குறி சொல்லுவேனம்மா
இன்பமுள்ள குறிகளம்மா

நான் கைபிடித்துப் பார்ப்பனம்மா
கண்ட குறி சொல்வேனம்மா

உங்கள் முகம் பார்த்து சொல்வேனம்மா
முத்துக் குறி நானுரைப்பேன்

இன்னும் குறி சொல்வேனம்மா
இன்பமான குறிகளெல்லாம்
குழந்தையில்லாப் பேர்களுக்கு
குழந்தைக் குறி சொல்வேனம்மா

மைந்தனில்லாத பேர்களுக்கு
மைந்தன் குறி சொல்வேனம்மா

பிள்ளையில்லாத பேர்களுக்கு
பிள்ளைக் குறி சொல்வேனம்மா'

அங்காள பரமேஸ்வரி இப்படி வீதியில் குறிபாடிக் கொண்டு போகும் போது. ராஜாவின் மனைவிமார்கள் ஐந்து பேரும் காதில் கேட்டு தாதிமார்களை கூப்பிட்டு "அடி, தாதிமார்களே! நாம் பிள்ளையில்லாமல், குழந்தையில்லாமல் இருக்கிறோம்; வீதியில் ஒரு குறத்தி குறி சொல்லிக் கொண்டு போகிறாள்! அவளை கூட்டிக் கொண்டு வாருங்கள்! நாம் குறி கேட்டு பார்க்கலாம்," என்றார்கள்.

தாதிமார்கள் "சரி, நல்லதம்மா!" என்று அரண்மனையை விட்டு வெளியில் வரும் போது, ர.ர. ஈஸ்வரியாகப்பட்டவள் "இந்த ராஜன் மனைவிகள் நம்மை ஆள் விட்டு கூப்பிடுவது நாம் போவதா?" என்று தாதிமார்கள் வெளியில் வருவதற்குள் அந்த வீதியை விட்டு வேறு வீதிக்கு

சென்று விட்டாள்.
ராஜாத்தியின் தாதிமார்கள் வெளியில் வந்து தெருத் தெருவாக தேடிப்பார்த்து எங்கும் காணாமல் திரும்பி அரண்மனைக்கு சென்று ராஜாத்திகளிடம் "அம்மணி! நாங்கள் குறத்தியை இதுவரை எங்கெங்கும் தேடியும் காணவில்லை!" என்றார்கள்.

இதைக்கேட்ட ராஜன் மனைவிகள் "சரி, நல்லது! நாளை காலையில் தேடிப்பார்க்கலா"மென்று மறுநாள் காலையில் அரசன் மனைவிகள் எழுந்து அவர்களே குறத்தியைத் தேடிக் கொண்டு புறப்பட்டார்கள். இவர்கள் தேடி வரும் போது, அங்காள பரமேஸ்வரி ராஜா வீட்டிற்கு அடுத்த வீட்டில் தர்மம் வாங்கிக் கொண்டிருந்தாள்! அதைக் கண்ட ராஜன் மனைவிகள் குறத்தியின் அருகில் சென்று "அம்மா! பாட்டி! இந்த ஊரெல்லாம் சேர்ந்து வாங்கும் தர்மத்தை, நாங்கள் எங்க வீட்டில் கொடுத்து விடுகிறோம், வாருங்கள்! எங்கள் வீட்டுக்கு போகலாம்" என்றார்கள்.

இதைக்கேட்ட குறத்தி "சரி நல்லது! வருகிறேன்!" என்று அவர்களுடன் புறப்பட்டு வந்து அரண்மனையின் ஆசார வாசலில் நின்றாள். குறத்தி வாசலின் உள்ளே வந்ததும், குறத்தி குடும்பமும் வெளியில் போய் விடுவாள் என்று ராஜாவின் மனைவிகள்

அரண்மனையின் நாலு கட்டுகளையும் சாத்தி தாள் போட்டு விட்டார்கள். பிறகு, குறத்தியை நோக்கி "அம்மா, பாட்டி! நீ எந்த ஊர்? எந்த தேசம்? சொல்" என்றார்கள்.

இதைக் கேட்ட அங்காள பரமேஸ்வரி, "இவர்களிடம் நம் ஊர் பெயரை சொல்வதா? என்று நினைத்து "அம்மா, ராஜாத்தி! என்னுடைய ஊர் மலை மலையாய் நாலு மலை!" என்றாள்.

அதற்கு ராஜன் மனைவிகள் "சரி, நல்லது! உன்னுடைய பெயர் என்ன?" என்று, கேட்டார்கள்.

அதற்கு குறத்தி "அம்மா, ராஜாத்திகளே! என்னுடைய பெயர் அங்கமுத்து!" என்றாள்.

அதற்கு அரசன் மனைவிகள் "சரி, பாட்டி! உன் ஜாதி யென்ன?" என்று கேட்டார்கள்.

குறத்தி "அம்மா, ராஜாத்தி! என்னுடைய ஜாதி குறச் ஜாதியம்மா!" என்றாள்.

ராஜன் மனைவிகள் "அம்மா! உனக்கு குறி சொல்லத் தெரியுமா?" என்றார்கள்.

அதற்கு அங்காள பரமேஸ்வரி "அம்மா, ராசன் மனைவிகளே! எனக்கு தெரிந்த அளவில் நான் குறி சொல்வேனம்மா!" என்றாள்

அதற்கு அரசன் மனைவிகள் "அம்மா, பாட்டி! நாங்கள் நினைத்ததெல்லாம் நீ சொல்லவேண்டும்?

பொய், பிரட்டுச் சொன்னால், உன்னை இந்த அரண்மனையை விட்டு வெளியில் விடமாட்டோம்! உன்னைப்போல் சிலபேர் இங்கே வந்து பொய்க்குறி சொல்லி, அதோ! அந்தச் சிறையில் போட்டு அடைத்து வைத்திருக்கிறோம்! என்றார்கள்.

இதையெல்லாம் கேட்ட அங்காள பரமேஸ்வரி இந்த திரியோதிர, ராஜாத்திகள்! நம்மை இவ்வளவு கேள்வி கேட்கிறார்களே. நாமளும் சில அவர்களை கேட்டுப்பார்க்கலாம் என்று நினைத்து "அம்மா, ராஜன் மனைவிகளே! நான், சும்மா வெறுங் கையில் குறி சொல்லி பழக்கமில்லையம்மா!" என்று சொன்னதும். ராஜன் மனைவிகள் "அம்மா, பாட்டி! குறிசொல்வதற்கு என்ன வேண்டும்?" என்றார்கள்.

அதற்கு அங்காள பரமேஸ்வரி "அம்மா, ராஜன் மனைவிகளே! நல்மாட்டு சாணம் கொண்டு நாலுமூலைச் சதுரமாக வழித்து, பிள்ளையார்! பிடித்து வைத்து, அதற்கு அருகம்புல் சூடி, கற்பூர தீபமேற்றி, வெற்றிலை பாக்கு வைத்து அதன்மேல் ஒரு முறத்து நிறைய முத்து அளந்து வைத்து தட்சணையாக வைக்க வேண்டும்! பிறகு, நிறை நாழி இவைகள் எல்லாம் வைத்தால் தான், நான் சொல்லும் குறி உண்மையாக பலிக்கும்!" என்றாள்.

இதைக் கேட்ட ராஜன் மனைவிகள் தாதிகளை தனியாக கூப்பிட்டு " அடி, தாதிமார்களே! குறி சொல்ல இவ்வளவு சாமானம் கேட்கிறாளே! என்ன செய்வது? சரி, அவள் சொன்ன சாமானம் எல்லாம் கொண்டு வந்து வையுங்கள், குறி சொல்லி முடிந்ததும் அந்த சாமானங்களை நாமே எடுத்து வீட்டுக்குள் வைத்துக் கொள்ளலாம்!" என்றதும் தாதிகள் மேற் சொன்ன சாமானங்களையெல்லாம் கொண்டு வந்து வைத்தார்கள்.

சாமானமெல்லாம் சரியாக வந்தபின், அங்காள பரமேஸ்வரி "அம்மா, ராஜன் மனைவிகளே! குறி சொல்கிறேன், கவனமாக கேளுங்கள்! என்று ஈ·ஸ்வரி குறி சொல்ல ஆரம்பித்தாள்-

அம்மா! வாசற்படி வலமாக, கௌலி! சகுனம் சொல் ஆது கேளம்மா! வருவார் போலிருக்கிறது வல்லாள ராஜன்! கூரைக் கட்டு வலமாக சொல்லுதம்மா, கௌலி! உங்கள் கொண்டவன் வருவார் போல் தோணுதம்மா, ராஜாத்தி! சாகாத வரமம்மா! வேகாத உடலையம்மா! உன் ராஜாவுக்கு! அந்தி பரதேசிகளுக்கு தானதர்மம் செய்யாத ராஜா வம்மா! ஏம்மா ராஜாத்தி! உன் கணவன்! கோட்டைக்குள் பிச்சைக்காரர்கள் வந்துவிடுவார்கள் என்று, ஊர்த்தலை வாசலில் ஆண் துனியும்!

வெண்ஞுனியும்! காவல் வைத்து அரசாண்டது உண்மையாம்மா ராஜாத்தி? உங்கள் கணவருக்கு ஐந்து தாரம் கல்யாணம் செய்து, ஐந்து மனைவிகளுக்கும் குழந்தையில்லை! உண்மையா ராஜாத்தி? நீங்கள் பிள்ளையில்லாமல் தரையை வழித்து, தரையில் சாதம் போட்டு சாப்பிட்டு, வரமா வரமிருப்பது உண்மை தானே? நீங்கள் சாப்பிட்ட கூட்டங்களைக் கழுவி வாசலில் ஊத்தினால், காகம்! குருவிகள்! அதை பொறுக்கி சாப்பிட்டு விடுமென்று, பூமியில் குழி வெட்டி குழியில் ஊத்தி மூடிவைப்பது உண்மை தானே?

நீங்கள் இவ்வளவு அதர்மம் செய்வதால் தான் உங்களுக்கு குழந்தையில்லை. உங்கள் கணவர் வேட்டைக்குப் போய் மூன்று மாதமாகிறது, ஆகையால், அங்கு இறந்து விட்டாரா? பிழைத்து வருவாரா? என்று, நீங்கள் கவலையுடன் இருப்பது உண்மையா?" என்று அங்காத்தா சொன்னதும் இதையெல்லாம் கேட்ட ராஜன் மனைவிகள் "அம்மா, குறத்தி! நீ, சொல்வதெல்லாம் உண்மைதான்! இப்போ எங்க ராஜா வருவாரா? இன்னும் வேட்டையாடிக் கொண்டு தான் இருப்பாரா? அதையும் பார்த்துச் சொல்லம்மா?" என்றார்கள்.

அதற்கு குறத்தியான ஈஸ்வரி "அம்மா, ராஜாத்தி மார்களே! உங்க ராஜா மூன்று மாதகாலமாக

வேட்டையாடி விட்டு இப்போது வந்து கொண்டி ருக்கிறார், சீக்கிரம், வந்து விடுவார்!! உங்கள் கணவன் வந்து இவ்வளவு சாமானங்களையும் பார்த்தால் உங்களையும் தண்டித்து விடுவார். என்னையும் தண்டித்து விடுவார். ஆகையால், உன் கணவன் வருவதற்குள் நான் வேறு ஊருக்கு போய் விடுகிறேன்," என்றாள்.

ப.ஸ்வரி இப்படிச் சொன்னதும் ராஜன் மனைவிகள் கூறி சொல்ல கொண்டு வந்து வைத்த சாமானங்களை யெல்லாம் எடுத்து வீட்டுக்குள் வைத்து விட்டு. எல்லோரும் துயில் கலைந்து கொண்டிருந்தார்கள்.

அங்காள பரமேஸ்வரி இதை யெல்லாம் நின்று பார்த்துவிட்டு அவர்களை நோக்கி "அம்மா, ராஜாத்திகளே! உன் அரண்மனைக்கு வந்து வெகுநேரம் ஆகிறது! கொஞ்சம் தர்மம் கொடுங்களம்மா?" என்றாள்.

அதற்கு அரசன் மனைவிகள் தாதிமார்களை கூப்பிட்டு "அந்தக் கிழவிக்கு ஒருபடி இறுங்குச் சோளம் கொடுத்து அரண்மனையை விட்டு வெளியில் துரத்தி விடுங்கள்!" என்றார்கள். தாதிமார்கள் உடனே சென்று இறுங்குச் சோளம் ஒருபடி கொண்டு வந்து குறத்திக்கு போட்டார்கள்.

அங்கான பரமேஷ்வரி சோளத்தை கடையில்
வாங்கிக் கொண்டு. பிறகு ராஜன் மனைவிகளை நோக்கி
"அம்மா, ராஜன் மனைவிகளே! சோளத்தை இந்த
நேரத்தில் போட்டால் எப்படி நான் சமைத்துப்
சாப்பிடுவேன்?" என்று, இன்னும் இவர்கள் மனதை
சோதித்து பார்க்கலாம் என்று "அம்மா! எனக்கு
பசி மயக்கம் அதிகமாக இருக்கிறது, கொஞ்சம்
கொடுங்களம்மா? பால் கொஞ்சம் ஊத்துங்கம்மா?
என்னுடைய ஐந்து சடையும் பிக்கிறது கொஞ்சம்
மோர் இருந்தால் ஊத்துங்கம்மா?" என்று ஈஷ்
வரி சொன்னதை ராஜாத்திகள் கேட்டு "அடடா!
இந்த சுடுகாட்டுக்கு போகும் கிழவிக்கு, மோர் வேணு
மா? தயிர் வேணுமா? பால் வேணுமாம்! மேலும் நாம்
அரசன் மனைவிகள்! ராஜ வம்சம்! இந்தக் கிழவி
கொஞ்சம் கூட பயமில்லாமல் நம்மிடம் பேசு
கிறாள்" என்று ராஜாத்திகளுக்கு கோபம் வந்து
தயிர் கடையும் மத்துக் கோலால் ஈஷ்வரியை அடி-
த்து விட்டாள். அவள் ஒரு கையால் ஈஷ்வரியை அடி
க்கும் போது. ஈஷ்வரி இரண்டு கையாலும் ஏந்தி
"அம்மா, ராஜன் பெண்சாதி! நான் தாகத்திற்கு
தயிர் கேட்டதற்கு, என்னை தயிர் மத்தால் அடித்
து விட்டாயே? இன்னும் உன் சொத்து.

சுகத்தை கேட்டிருந்தால் என்ன கொன்றே இருப்பாய்? என்று அங்காள பரமேஸ்வரிக்கு கோபம் வந்து அரண்மனை வாசலில் ஆங்கார நடனம் ஆடினாள். அப்படி ஆடும் போது, ஈஸ்வரியின் தேகமெல்லாம் வேர்த்து அந்த வேர்வை பூமியில் வடிந்து விழுந்தது. அந்த வேர்வை பூமியில் விழுந்ததும், பூமி இரண்டாக வெடித்து அதில் வீரபத்திர சுவாமி பதினெட்டு ஆயுதங்களுடன் தோன்றினார். அவர் ஈஸ்வரியை நோக்கி "ஏன், தாயே! என்ன அழைத்தாய்? என்று கேட்டார்.

அதற்கு ஈஸ்வரி "அடே, வீரபத்திரா! இந்த ராஜாவின் மனைவிகளில், கடைசி மனைவியின் வயிற்றில் நீ! கருவாகி உருவாகி அவள் வயிற்றில் இருப்பாய் மகனே! அப்படி நீ வயிற்றில் இருக்கும் போது 10 மாதம் ஆனாலும் குழந்தை பிறக்கக் கூடாது, 16 மாதம் ஆனாலும் குழந்தை பிறக்கக் கூடாது. அவளுக்கு பெரு வயிறு கொண்டு நடு வீட்டில் சாயவேணும்! இந்த உலகத்தில் யார் வந்து மருத்துவம் பார்த்தாலும்! குழந்தை பிறக்கக் கூடாது. நான் எப்போது வந்து மருத்துவர் பார்ப்பேனோ, அப்போது தான் குழந்தை பிறக்க வேண்டும்" என்று ஈஸ்வரி வீரபத்ர சாமிக்கு வரம் கொடுத்து விட்டு தில்லை சிதம்பரம் திருவேளாங் காட்டுக்கு சென்று விட்டாள் அங்காளபரமேஸ்வரி! அக்காலத்தில்-

இருந்த திருவெள்ளங்காடு. இக்காலத்தில் திருவானைக்காவல் என்று பெயர் விளங்குகிறது! திருவெள்ளங்காட்டுக்கு ஏ.வ்வரி சென்று ஆவாரந்தழையொடித்து தாவாரப்பந்தல் போட்டு, அந்தப் பந்தலில் தன்னுடைய ஆயிரம் ஜடை முடியை விரித்து உட்கார்ந்து கொண்டாள்.

திருவெள்ளங்காட்டில் ஏ.வ்வரி இப்படியிருக்கும்போது வள்ளால ராஜன் அரண்மனையில் அரசன் வேட்டையிலிருந்து வீட்டுக்கு வந்து மனைவி கர்ப்பமாக இருப்பதை பார்த்து " ஆகா! நமக்கு ராஜ்யத்தை ஆள்வதற்கு மைந்தன் பிறக்கப் போகிறான்! என்று சந்தோசமடைந்தார் வள்ளால ராஜன்! மற்றும் மந்திரிகள், சேவகர்கள் எல்லோரும் சந்தோசமடைந்தார்கள்.

அப்போது ராஜன் இளைய மனைவிக்கு கர்ப்பம் சரியாக 10, முடிந்து 16. மாதம் ஆகிவிட்டது. ஆனால், குழந்தை பிறக்கவில்லை. 100. பேர் மருத்துவ காரிகள் வந்து மருத்துவம் பார்த்தும் குழந்தை பிறக்கவில்லை. மேற் சொன்ன மருத்துவகாரி 100 பேரும் ஒன்று சேர்ந்து " அடி அக்கா மார்களே! இந்த ராஜாத்தியின் வயிற்றில் இருப்பது பேயோ, பிசாசோ? தெரியவில்லை, குழந்தையும் பிறக்கவில்லை. வாருங்கள்! நாம் போய் அரசிடம் சொல்வோமென்று எல்லோரும் அரசிடம் சென்று அரசே!

எங்களால் முடிந்தவரை வைத்தியம் பார்த்தோம், குழந்தை பிறக்கவில்லை!" என்று சொன்னார்கள்.

இதைக்கேட்ட வள்ளாலராஜன் "ஓகோ! அப்படியா? சரி நீங்கள் போய் அரசியை பார்த்துக் கொள்ளுங்கள்! என்று சொல்லி விட்டு மந்திரிகளை கூப்பிட்டு. அப்பா, மந்திரி மார்களே! இந்த 100, மருத்துவகாரிகளாலும் ஒன்றும் செய்ய முடியவில்லை. ஆகையால். நீங்கள் சென்று 300 வருஷம் நிறைந்த ஒரு கிழவியை பார்த்து, கூட்டி வாருங்கள்!" என்றார்.

இதைக் கேட்ட மந்திரிகள் "சரி நல்லது, அரசே! நாங்கள் போய் கூட்டி வருகிறோம்!" என்று. புறப்பட்டுச் சென்று ஊர் கண்ட பக்கம். பட்டணம் கண்ட பக்க மெல்லாம் தேடிப் பார்க்கும் போது, எங்கும் 300. வயது கிழவியை காணவில்லை "இனி அரசரிடம் சென்று மருத்துவகாரி கிடைக்க வில்லை யென்று சொன்னால். நம்மளை தண்டித்து விடுவாரே, என்று மந்திரிகள் பயந்து நாம் இப்படியே கீழ் தேசம் சென்று வேறு அரசரிடம் வேலைக்கு சேர்ந்து கொள்ளலாம்" என்று நான்கு மந்திரிகளும் கீழ் தேசம் நோக்கி புறப்பட்டார்கள். இப்படி இவர்கள் அங்காள பரமேஸ்வரி இருக்கும் தில்லை திருவேளாங்காட்டு பக்கம் வரும் போது. நாலுபேரில் எல்லோருக்கும் பின்னால் வருபவன் "நாம் எல்லோருக்கும் பின்னால் போகிறோம். பேய் பிசாசு ஏதாவது நம்மளை பிடித்துக் கொள்ளுமோ? என்று பயந்து கொண்டு வந்தான். மேலும் அங்கும் இங்கும் திரும்பி திரும்பி

பார்த்துக் கொண்டு வந்தான். அப்படி இவன் பார்த்து வரும் போது அங்காள பரமேஸ்வரி ஆவரம் பந்தலில் ஆசனம் போட்டு அமர்ந்திருந்தாள். பின்னால் வந்தவன் அங்காள பரமேஸ்வரியை பார்த்து மற்றவர்களை நோக்கி "அண்ணா! நாம் இவ்வளவு தூரம் ஒரு கிழவியை தேடி வந்தோம். இதோ, பாருங்கள்! இந்தப் பந்தலில் ஒரு கிழவி படுத்திருக்கிறாள்!" இதைக் கேட்ட மற்ற மந்திரிகளும் சேர்ந்து அங்காள பரமேஸ்வரியிடம் சென்று "அம்மா, பாட்டி! பாட்டி!! என்று கூப்பிட்டார்கள்.

அப்போது அங்காள பரமேஸ்வரி காது கேட்காதது போல் படுத்துக் கொண்டிருந்தாள். இதைக் கண்ட மந்திரிகள் நால்வரும் "என்னடா? பாட்டி! எழுந்திருக்க மாண்டாள் போல் இருக்கிறது. ஒரு குச்சியை எடுத்து, காதை (காதில்) குத்தினால் எழுந்து விடுவாள்" என்று பேசும் போது. அங்காள பரமேஸ்வரியாகப்பட்டவள் ஏது, இனி நாம் படுத்துக் கொண்டிருந்தால், இவர்கள் நம் தேகத்தை தொட்டு விடுவார் என்று திடீரென்று எழுந்து உட்கார்ந்தாள்.

அப்போது, நான்கு மந்திரிகளும் ஈ.ஸ்வரியை நோக்கி "அம்மா, பாட்டி! இங்கு ஏன்

வந்து உட்கார்ந்து கொண்டாய்? உனக்கு வீடு வாசல் ஒன்றுமில்லையா? இந்த இருண்ட வனத்தில்! ஏன் படுத்துக் கொண்டாய்?" என்றார்கள்.

அதற்கு பாட்டியான ஔவ்வை "அப்பா, மந்திரி மார்களே! எனக்கு வீடும் இது தான்! பேயும் நான் தான்! ஆதரவும் நான் தான்! பேய், பிசாசு, எல்லாமே என்னிடம் விளையாடுமப்பா! என்றாள்.

அதற்கு, மந்திரிகள் "அம்மா, பாட்டி! உனக்கு வைத்தியம் தெரியுமா?" என்று கேட்டார்கள்.

அதற்கு, ஔவ்வை "அப்பா, மந்திரிகளே! என்ன வைத்தியம் பார்க்க வேண்டும்?" என்றாள்.

அதற்கு மந்திரிகள் "அம்மா, பாட்டி! பிள்ளைப் பண்டுவம் பார்க்க வேண்டும்!" என்றார்கள். அதற்கு ஔவ்வை "அப்பா, மந்திரிகளே! நான் பிள்ளை பிள்ளை தலைமுறைக்கு பிள்ளைப்பண்டுவக்காரி! தலைமுறை தலைமுறைக்கு நான் மருத்துவ காரியப்பா! என்னை மருத்துவகாரி என்று உலகமெங்கும் சொல்வார்கள்." என்றாள்.

இதைக் கேட்ட மந்திரிகள் சந்தோசமடைந்து அம்மா, பாட்டி! எங்கள் அரசர் மனைவிக்கு குழந்தை பிறக்க முடியாமல் ரம்பவும் கஷ்டப்படுகிறார்கள்! 100, மருத்துவகாரிகள் வந்து மருத்துவம் பார்த்தும், குழந்தை பிறக்கவில்லை; ஆகையால், நீங்கள் வந்து எங்க ராஜா பெண்சாதிக்கு, தாய்வேறு பிள்ளை

செய்து கொடுக்க வேணும் பாட்டி! அப்படி செய்து கொடுத்தால் உனக்கு பிள்ளை பிள்ளை தலைமுறைக்கும் பேர்க்குடியாவார்கள். சீக்கிரம் புறப்படு பாட்டி போகலாம்" என்றார்கள்.

அதற்கு ஔவ்வை "அப்பா, மந்திரிகளே! என்னால் நடந்து வர முடியாதே. என்ன செய்வது?" என்றதும் மந்திரிகள் "அம்மா, பாட்டி! நாங்கள் உன்னை தூக்கிக் கொண்டு போகிறோம், வா!" என்றார்கள்.

அதற்கு ஔவ்வை "அப்பா, மந்திரிகளே! நீங்கள் என்னை தூக்கிக் கொண்டு போனால், நான் வயதானவள், அதனால், என் தேகமெல்லாம் உதிர்ந்து போய் விடும்." என்றாள். அதற்கு மந்திரிகள் "பின் என்ன செய்வது, பாட்டி?" என்றார்கள். அதற்கு ஔவ்வை "அப்பா, மந்திரிகளே! என்னால் ஒரு அடி நடக்க முடியாது, உங்கள் ராஜன் ஏறக்கூடிய ரதம்! முத்து, வைடூரியம் வைத்து செய்த ரதத்தை கொண்டு வந்தால் தான் நான் வருவேன்! என்றதும். மந்திரிகள் "சரி!" என்று இரண்டு பேர் பாட்டிக்கு காவல் இருந்து கொண்டு, மற்ற இரண்டு பேர் அரசரிடம் சென்று, நமஸ்காரம் செய்தார்கள். இவர்களை கண்ட அரசர் " அப்பா, மந்திரிகளே! மருத்துவ காரியை கூட்டி வந்தீர்களா?" என்று கேட்டார்.

அதற்கு மந்திரிகள் "அரசே! நாங்கள் உலகமெங்கும் தேடிப்பார்த்து மருத்துவ காரியை

காணாமல்; மறுபடியும் கிழக்குத்திசையை நோக்கிப்
போனோம். அப்படிப்போகும் போது, திருவேளாங்
காட்டில் ஒரு பாட்டியிருந்தாள். அவளுக்கு 300 வயது
இருக்கும்; அவளை நாங்கள் கூப்பிட்டோம், நடக்
கமுடியாது என்று சொல்லிவிட்டாள். தாங்கள்
ஏறும் ரதத்தை கொண்டு வந்தால்தான் வருவ
தாக அந்தப்பாட்டி சொல்கிறாள்." என்றார்கள்.

அதற்கு அரசர் "அப்பா, மந்திரிகளே! ஆபத்திற்கு
பாவமில்லை; நம் ரதத்தைக் கொண்டு போய்
அவளை சீக்கிரம் கூட்டி வாருங்கள்! என்றார்.

உடனே மந்திரிகள் ரதத்தை ஓட்டிக் கொண்டு
பாட்டியிடம் சென்று "அம்மா, பாட்டி! இதோ!
ரதம் கொண்டு வந்து விட்டோம்; இதில்
ஏறுங்கள், போகலா"மென்றார்கள்.

ஔவை "சரி" என்று ரதத்தின் மேல் ஏறி
உட்கார்ந்து மனதில் ஒரு யோசனை நினைத்
தாள். 'அதாவது, நாம் அந்தக் காலத்தில்
இந்த ராஜா வீட்டிற்கு தர்மத்திற்கு போன
தற்கு, நம்மை தயிர் மத்தால் அடித்தவளுக்குத்
தானே நாம் மருத்துவம் பார்க்கப் போகிறோம்' என்று
நினைத்து தன்னுடைய கூந்தலை நாலு ஜடையாக
செய்து, ரதத்தின் நாலுபக்கமும் கீழே பூமியில்
போட்டாள். அப்படி போடப்பட்ட ஜடையாகப்பட்டது
ஆலமர விழுது போல் பூமியில் வேரூன்றி நின்றது.

பிறகு அங்காள பரமேஷ்வரி மந்திரிகளை நோக்கி "அப்பா, மந்திரிகளே! ரதத்தை தூக்குங்கள், போகலாம்" என்றாள். உடனே மந்திரிகள் நான்கு பேரும் சேர்ந்து ரதத்தை மேலே தூக்கும் போது, ரதத்தை தூக்கமுடியவில்லை. அப்போது நாலு மந்திரிகளும் "ஐயோ! ரதத்தை இங்கு கொண்டு வந்து வைத்து, இப்ப தூக்கமுடியவில்லையே, ராஜா கேட்டால் என்ன பதில் சொல்வதென்று" நான்கு பேரும் அழுதார்கள்.

இவர்கள் அழுவதைப்பார்த்த பாட்டியான அங்காள பரமேஷ்வரி "அப்பா, மந்திரிகளே! ஏன், அழுகிறீர்கள்? உங்க ராஜாத்திதான் குழந்தை பிறக்க முடியாமல் அழுது கொண்டிருக்கிறாள். நீங்கள் ஏன் அழுக வேண்டும்?" என்றாள். அதற்கு மந்திரிகள் "அம்மா, தாயே! நாங்கள் ராஜாவின் ரதத்தை கொண்டு வந்து இங்கு வைத்து, இப்போது ரதத்தை மேலே தூக்கமுடியவில்லையே! ராஜா கேட்டால் என்ன சொல்வதென்று தான் அழுகிறோம்" என்றார்கள்.

அதற்கு அங்காள பரமேஷ்வரி "அப்பா, மந்திரிகளே! நீங்கள் ரதத்தை தூக்கவும் முடியாது; நீங்கள் கூப்பிட்டால் நான் வரவுமாட்டேன். நான் அழையாத

வீட்டில் நுழையமாண்டேன்! மதியாதவர்
வீட்டில் மிதிக்கவும் மாண்டேன்; ஆகையால்,
உங்கள் ராஜாவே வந்து கூப்பிட்டால்
தான் நான் வருவேன்;" என்று சொல்லவும்,
மந்திரிகள் "சரி, பாட்டி! என்று இரண்டு
மந்திரிகள் புறப்பட்டு அரசரிடம் சென்று
நமஸ்காரம் செய்தார்கள். இவர்களைக்
கண்ட அரசர் "ஏப்பா, மந்திரிமார்களே!
மருத்துவ காரியை கூட்டி வந்தீர்களா?
என்று கேட்டார். அதற்கு மந்திரிகள்
"அரசே! நாங்கள் மருத்துகாரியை ரதத்தில்
எடுத்து வைத்துக் கூப்பிட்டோம்; அதற்கு
அவள் அழையாத வீட்டில் நுழைய மாண்டேன்.
மதியாத வீட்டை மிதிக்க மாண்டேன் என்று
சொல்லிவிட்டாள். நாங்களே வந்து
கூப்பிட்டால் தான் வருவதாக சொல்லி
விட்டாள்" என்றார்கள்.

இதைக்கேட்ட அரசர் சரியென்று
ரதத்தில் ஏறி புறப்பட்டு திருவேளாங்காடு
சென்று ரதத்தை விட்டு கீழேயிறங்கி
பாட்டியை நமஸ்காரம் புரிந்தான், அரசன்.

அப்போது ஈஸ்வரி அரசனை நோக்கி "அப்பா, அரசனே! நீதான் வாங்கிய கடன் கொடுக்காத வள்ளால ராஜன்! கொடுத்த கடன் கொடுக்காத குமார ராஜனா?" என்று கேட்டாள்.

அதற்கு அவ்வரசன் "ஆம், தாயே! என்னைத்தான் அப்படிச் சொல்வார்கள்," என்றார்.

இதைக்கேட்ட ஈஸ்வரி "அப்பா, ராஜனே! முன்னொருநாள் உன் வீட்டுக்கு தர்மத்திற்கு வந்ததற்கு, உன் மனைவிகள் எனக்கு கொடுத்த பிச்சையை பார்!" என்று, ஒருபடி இறுங்கச் சோளத்தையும் இறக்கூடையுடன் ராஜன் தலையில் வைத்தாள். சோளத்தை ராஜன் தலையில் வைக்கவும், அவ்வரசனுக்கு ஒருமலையையே தூக்கி தலையில் வைத்ததுபோலிருந்தது.

பாரம் தாங்க முடியாமல் ராஜன் ஈஸ்வரியை நோக்கி "அம்மா, தாயே! உன் உருவம் எனக்குத் தெரியவில்லை; இந்தக் கூடையை என் தலையை விட்டு அப்புறம் எடு!" என்றார்.

உடனே அங்காள பரமேஸ்வரி ராஜன் தலையை விட்டு கூடையை எடுத்துக்கொண்டு. "அப்பா, ராஜனே! இப்போது நான் எங்கு வரவேண்டும்?" என்று கேட்டாள்.

அதற்கு அரசன் "அம்மா, தாயே! என்

மனைவிக்கு குழந்தை பிறக்க முடியாமல் கஷ்டப் படுகிறாள்; நீ வந்து தாய் வேறு, பிள்ளை வேறு செய்து கொடம்மா!" என்றார்.

அதற்கு ஃவ்வறியானவள் "அப்பா, ராஜனே! உன் வீட்டில் வந்து நான் மருத்துவம் பார்த் தால், எனக்கு மருத்துவம் பலிக்காது!" என்றாள்.

இதைக் கேட்ட அரசர் "அம்மா, தாயே! எல்லா மருத்துவகாரிகளும் வீட்டில் வந்து மருத்துவம் பார்க்கிறார்கள்; நீ வந்து பார்த் தால் ஏன் பலிக்காது?" என்றார்.

அதற்கு அங்காள பரமேஸ்வரி "அப்பா, ராஜனே! உன் ஊருக்கு வடபுறம் பச்சைப் பந்தல் போடவேணும்! அதில் கச்சைச் கட்டில் போட்டு, உன் மனைவியை அதில் படுக்க வைக்கவேண்டும்! அந்த இடத்தில் தங்க விளக்கு, முத்து விளக்கு, வெள்ளி விள க்கு இப்படி ஆயிரம் தீபம் வைக்கவேண்டும்! மற்ற 100 பேர் மருத்துவகாரிகளும், பந்தலில் சுற்றியும் உட்கார்ந்திருக்க வேண்டும்; இப்படிச் செய்தால் தான் என் மருத்துவம் பலிக்கும்;" என்றாள்.

இவைகளையெல்லாம் கேட்ட அரசன் "சரி, நல லது தாயே! நான் முன்னால் சென்று இவை களையெல்லாம் செய்து வைக்கிறேன்;

நீங்கள் பின்னால் வந்து சேருங்கள்!" என்று சொல்லிவிட்டு அரசன் ஊருக்கு புறப்பட்டுச் சென்று, மந்திரிகளிடம் சொல்லி ஊருக்கு வடபுறம் பச்சைப்பந்தல் போட்டு, மனைவியையும் கொண்டுபோய் அதில் படுக்க வைத்து, வேண்டிய ஏற்பாடுகளை செய்து வைத்தான், அரசன்.

இதற்குள் அங்காளபரமேஸ்வரியும் வந்து ரதத்தை விட்டு கீழேயிறங்கி பச்சைப்பந்தலில் போய் நின்று யோசனை செய்தாள்.-

அக்காலத்தில் நாம் தாகத்திற்கு இந்தராஜன் மனைவியிடம் தயிர் கேட்டோம்; இவள் தயிர் மத்தால் நம்மை அடித்து விட்டாள்; இப்போது, நாம் இவளுக்கு மருத்துவம் பார்க்க, மருத்துவகாரியாக வந்திருக்கிறோம்; இன்னும் இவளுடைய மனம் எப்படியென்று சோதித்துப் பார்க்க வேணுமென்று, அரசன் மனைவியை நோக்கி "அம்மா, ராஜன் பெண்சாதி! உனக்குத்தான் நான் மருத்துவம் பார்க்க வந்துள்ளேன்! இப்ப எனக்கு நாக்கு அடைக்குது, கண் தெரியவில்லை பசிமயக்கம், அதிகமாக இருக்கிறது! ஆகையால், சாதமிருந்தால் கொஞ்சம்

போடச் சொல்" என்று அங்காள பரமேஸ்வரி
கேட்டதும், ஆரியாகப்பட்டவள் "நூறுபேர்
மருத்துவகாரிகளுக்கு மருத்துவம் தெரி
யாமல். இந்த சுடுகாட்டுக்கு போகிற
கிழவியா நாய் வேறு, பிள்ளைவேறு செய்து
கொடுக்கிறாள்; இந்த நேரத்தில் இவ
ளுக்கு சோறு சமைத்தா வைத்திருக்கிறது?
நம்முடைய மாட்டுகளுக்கு செய்த கஞ்சி
அண்டாவில் இருக்கிறது; அதில் ஒரு
டம்ளர் கொண்டு வந்து இந்தக் கிழவிக்
கு ஊத்துங்கள்! என்று ராஜன் மனைவியா
கப்பட்டவள் தாதிமார்களிடம் சொன்னாள்.

அதன்படி தாதிமார்கள் கஞ்சி கொண்டு
வந்து ஊத்தினார்கள். அங்காள பரமேஸ்
வரி கஞ்சியை வாங்கி வைத்து விட்டு,
பச்சைப்பந்தலின் உள்ளே நுழைந்து, சாத்
திக் கதவடைத்தாள், தாள்போட்டு மன்
னறைந்தாள். இருந்திக் கதவடைத்தாள்
ஈ.ஏமண் கூறு கொண்டாள். மற்ற நூறுபேர்
மருத்துவகாரிகளுக்கும் கண் தெரியாமல்
திட்டித்து விட்டாள். பிறகு அங்காள பர
மேஸ்வரி ராஜன் பெண்சாதியை மடிமேல்
எடுத்து வைத்து தன்னுடைய வீரசு-
டையை பிடித்துப் பார்த்தாள். அதில்

ஒரு மூளக் கூர்ற கோடாலி இருந்தது. அதை யெடுத்து ராஜன் மனைவியை நெற்றி யிலிருந்து, மார்பை பிளந்தாள். வயிற்றை கிழிக்கும் போது, குழந்தை சத்தமிட்டது. ஈஸ்வரி குழந்தையை எடுத்து இறக்கை- யையில் போட்டுக் கொண்டாள். ஈ. ஈரலை எடுத்து வாயில் கவ்விக் கொண்டாள் குடலை யெடுத்து மாலைபோட்டுக் கொண் டாள். ரத்தத்தை அள்ளி உடம்பெல் லாம் பூசிக் கொண்டாள். பிறகு பச்சைப் பந்தலை விட்டு வெளியில் வந்து, மயானக் கரை சென்று, உட்கார்ந்து கொண்டாள்.

அங்காள பரமேஸ்வரி மயானக் கரை சென்று உட்கார்ந்திருக்கும்போது, நூறு பேர் மருத் துவகாரிகளுக்கும் கண் தெரிந்து, எல்லோரு ம் ராஜாத்தியை பார்த்து அழுது கொண்டு "இந்தப் பொல்லாத, வள்ளால ராஜன்! சடையும் முடியுடன் ஒரு வேலை கொண்டு வந்து விட்டு ராஜாத்தியின் குடலையும் காணோம். ஈ. ஈரலையும் காணோம் குழந்தையையும் காணோம் ரத்தத் தையும் காணோம் என்னமோ எடுத்து சாப்பி ட்டு விட்டு போயவிட்டது. என்று,

எல்லோரும் சென்று அரசயிடம் சொன்னார்கள். அதைக்கேட்ட வெள்ளால ராஜன் இனி இந்த செத்த பிரேதத்தை வைத்துக்கொண்டு என்ன செய்வதென்று மந்திரிகளை கூப்பிட்டு "அப்பா, மந்திரிகளே! இந்த செத்த பிரேதத்தை வைத்துக் கொண்டு, என்ன செய்வது. பிரேதத்தை மயானத்திற்கு எடுத்துச் சென்று சந்தனக் கட்டை, குங்குமக் கட்டை, அயலக் கட்டை இப்படி வாசம் பொருந்திய கட்டைகளை வைத்து சுட்டு விடுங்கள்" என்றார்.

மந்திரிகள் உடனே அரசியின் பிரேதத்தை மயானத்திற்கு கொண்டுபோய் வைத்து அக்கினியை மூட்டிவிட்டு எல்லோரும் வீட்டுக்கு வந்தார்கள். அப்போது அங்காள பரமேஸ்வரி பார்த்து "ஆகா! இந்த ராஜன் பெண்சாதி வெந்து போனால் உலகமே வெந்து போன மாதிரி" என்று அந்தக் கட்டைகளை எல்லாம் களைந்து எறிந்து விட்டு அந்த ராஜா பெண்சாதியை கொடூங்கையால் எடுத்துக் கொண்டாள். பிறகு அதே மயானத்தில் கொண்ணைப்பூ வெடுத்து, குடுசுகள் உண்டு பண்ணி அந்தக் குடிசையில் இருந்தாள் அங்காள பரமேஸ்வரி.

அப்போது அரண்மனையில் ராஜன், மந்திரி மார்களையெல்லாம் கூப்பிட்டு "அப்பா, மந்திரிமார்களே! நம்ம வீட்டு ஜடையும் முடியுடன் வந்த மருத்துவகாரியை எங்கிருந்தாலும் நாம் கண்டு பிடிக்க வேணும், எடுங்கள், நாம் வேட்டைக்குப் போகலாம்" என்று யானை, குதிரை, வில்லம்பெல்லாம் பூட்டிக் கொண்டு, மந்திரிகளுடன் வேட்டைக்குச் சென்றார்கள்.

அரசன் மந்திரிகளுடன் வேட்டைக்குச் சென்று காலை முதல் மாலைவரை வேட்டையாடி விட்டு, ஜடையும், முடியுடன் வந்த கிழவியை காணாமல், அந்த மயாணத்தின் பக்கமாக வந்து ஒரு ஆலவிருக்ஷத்தின் அடியில் தங்கினார்கள். அந்த இரவு அங்காள பரமேஷ்வரி அந்த ராஜனுடைய குழந்தையை தொட்டிலில் வைத்து தூங்க வைத்த பாட்டுச் சத்தம்.

ராரி, ராரி, ராராரோ வென்ற சத்தம் ராஜன் காதில் கேட்டு மந்திரிகளை நோக்கி "அடே, மந்திரிகளே! அந்தக் குடிசையில் யாரோ ஒருவள் ஒரு குழந்தையை, ராஜன் பெற்ற குஞ்சரமே என்று பாட்டுச் சொல்லி

தாலாட்டுகிறாள். நம்ம வீட்டுக்கு வந்த கிழவி போல் தெரிகிறது; வாருங்கள்! நாம் போய் குடிசையை சுற்றியும் நின்று அவளைப் பிடிக்க வேண்டு"மென்று எல்லோரும் குடிசைக்குப் போகும் போது, ஈச்வரி மாயமாக மறைந்து கொண்டாள். இவர்கள் சென்று குடிசையெல்லாம் தேடிப்பார்த்து விட்டு அரசன் மந்திரிகளை நோக்கி "இதுவென்ன ஆச்சரியமாக இருக்கிறது; சரி வாருங்கள்! நாம் அரண்மனைக்குப் போகலா"மென்று எல்லோரும் அரண்மனை போய் சேர்ந்தார்கள்.

அன்று போய் மறுநாள், அங்காள பரமேஸ்வரி இறந்த மாதிரி வடிவெடுத்து மயானத்தில் நின்று சுடுகாட்டு சாம்பலை அள்ளி வள்ளால ராஜன் பட்டணத்தின் மேல் வீசினாள். சாம்பலை வீசியவுடன் அப்பட்டணத்தில் உள்ள ஆண் பெண், எல்லோருக்கும் பேய் பிடித்து ஓங்கார சத்தமிட்டு ஆடினார்கள். வள்ளால ராஜன் ஒருவன் மட்டும், சுய உணர்வுடன் சிம்மாசனத்திலிருந்து கீழே யிறங்கி வந்து சலவைக் கல் மேடைமேல் உட்கார்ந்தார்.

சலவைக்கல்மேல் உட்கார்ந்த ராஜன்
எண்ணாத எண்ணமெல்லாம் மனதில் எண்ணி
"நம்ம வீட்டிலும் இப்படி, நம்ம ஊர் ஜனங்
களும் இப்படி, இது யார் பண்ணும் கோலமோ."
என்று மனதில் ரொம்ப விசனமடைந்து இருந்
தான்.

அப்போது அங்காள பரமேஸ்வரி கொடங்கி
வடிவெடுத்து குடுகுடுப்பை கையில் எடுத்து,
அந்த ராஜன் வீதியில் குறிபார்த்துச் சொல்லி
வருவதெப்படியென்றால்?
'நான் மலையாளக் குறத்தியப்பா! மகிமையான
குறத்தியப்பா!' என்று பாடி வரும்போது,
வல்லாள ராஜன் கண்டு "அம்மா, குறப்பெண்
ணே! எனக்கொரு குறிபார்த்துச் சொல்
லம்மா!" என்று கேட்டான்.

அங்காள பரமேஸ்வரி வல்லாள ராஜனுக்கு
குறி சொல்லுதல்.

பாட்டு 'யாரப்பா வல்லாள ராஜன்
நீ அதிகாரகாரனப்பா
உன் வீட்டுக்கு வந்த அவதிகளை
சொல்லுகிறேன் கேளுமப்பா
அவள் வடக்கு வடதேசம்
வாலி கொண்ட லாடபுரம்

தாயனூர் மலையனூரிலிருந்து
வந்த தெய்வமப்பா
அவள் பிச்சைக்கு இச்சைக்கு சொல்லி
உன் வீட்டுக்கு வந்தது நானுண்டும்
தாகத்திற்கு தயிர்த்தண்ணி
உன் பெண் சாதியை கேட்டதுண்டும்
உன் பெண்சாதி தயிர் மத்தை எடுத்து
அங்காள பரமேஸ்வரியை அடித்ததுண்டு!

அப்பா, வல்லால ராஜனே! அந்த அங்காள பர-மேஸ்வரி பண்ணிய அலங்கோலமப்பா உன் வீட்டிலே" என்றாள். இப்படி ஈஸ்வரி கூறி சொன்னதைக் கேட்ட வல்லால ராஜன் "அம்மா, தாயே! அந்த அங்கம்மா பண்ணப்பட்ட அலங் கோலமென்று சொல்கிறாயே, அப்படி அங் காயி மகிமையிருந்தால், என் வீட்டில் எப் போதும் போல் இருக்க வேண்டும். இந்த ஊரும் எப்போதும் போல் இருக்க வேணும். அப்படி நடந்தால் நான் அங்கம்மாளை குல தெய்வமாக கொண்டாடுகிறேன்!! என்றதும், அங்காள பரமேஸ்வரி வல் லாலராஜன் அரண்மனைக்குள் நுழைந்து தன்னுடைய கொடுங்கையிலிருந்து

ராஜாத்தியை எடுத்து கச்சிக்கட்டிலில் படுக்கவைத்து, ஒருநாள் குழந்தையை ஆறுநாள் குழந்தை போல் செய்து ராஜாத்தியின் கையில் கொடுத்து விட்டு அரண்மனை விட்டு வெளியில் வந்து, வள்ளால ராஜாவிடம் "என் மகிமையைப் போய்ப் பார்! என்றாள்.

ராஜன் அரண்மனைக்குள் சென்று பார்க்கும் போது, ராஜாவைக் கண்ட ராஜாத்தி அப்போது தான் தூங்கி எழுந்தது போல் எழுந்து சிரித்துக் கொண்டு வந்தாள். அதைக்கண்ட அரசனும், ஊர் ஜனங்களும் கூடி, அங்காள பரமேஸ்வரிக்கு பக்கமாக வந்து நின்று "அம்மா, தாயே! உன்னை விடத் தெய்வம் உலகத்தில் கிடையாது. தெய்வத்திலும் தெய்வம் நீ இந்த நாட்டுக்கே பிள்ளைத் தெய்வம்மா!" என்று, மருத்துவ கூலி யென்று ஆயிரம் பேரும், ஆயிரம் பணம் கொடுத்தார்கள்.

பிறகு அங்காள பரமேஸ்வரி ராஜனை நோக்கி "அகோ, பாரும், வள்ளால-

ராஜனே! நீ, சாகாத வரமும், வேகாத சுடலையுமாக வரம் பெற்றிருந்தாய்; இப்போது, அதை விட்டு, நூறு ஆண்டுகளுக்குத்தான் நீ, அரசாள வேண்டும்! ஆணாய் பிறந்தால், அங்கமுத்து என்று பெயர் வைக்க வேணும். பெண்ணாய் பிறந்தால், அங்காத்தாள் என்று பெயர் வைக்க வேணும். வருஷம் ஒருநாள் எனக்கு பிள்ளைப் பொங்கள் வைக்க வேண்டும்!" என்றாள்.

அதற்கு வள்ளால ராஜனும், ஊர் ஜனங்களும் "அம்மா, தாயே! அப்படியே நடத்திவருகிறோம்" என்று ஈஸ்வரியை வணங்கி சுகமாக இருந்தார்கள்.

மங்களம்.